Registered as a NewsPaper

விலை ரூபா 7.00

# ஈழநாதம்

EELANATHAM — மக்கள் நாளிதழ்

பக்கங்கள் - 08

நாதம் 14 | திருவள்ளுவர் ஆண்டு 2034 | ஆனி - 07 | 22 - 06 - 2003 | ஞாயிற்றுக்கிழமை | ஓசை 124

வவுனியா ஒப்டிக்கல்
Vavuniya Optical

கண் பரிசோதிக்கப்பட்டு மூக்குக் கண்ணாடி 1/2 மணித்தியாலத்தில் பெற்றுக் கொள்ளலாம். உங்கள் வைத்தியத் துண்டுகளுக்கும் கண்ணாடி வழங்கப்படும்



வவுனியா ஒப்டிக்கல்,
30 பஸ் நிலையம்,
வவுனியா.

# இடைக்கால நிர்வாகம் தொடர்பான பிரேரணைகள்

# முழுமையாகத் தயார் செய்யப்படவில்லை

## சனாதிபதியிடம் ரணில் தெரிவிப்பு

(கொழும்பு)

**வடக்கு-கிழக்கு மாகாணத்திற்கான இடைக்கால நிர்வாகம் தொடர்பான இறுதிப் பிரேரணைகள் இன்னமும் முழுமையாகத் தயார் செய்யப்படவில்லை என சிறிலங்காப் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க சனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவிடம் தெரிவித்துள்ளார். சனாதிபதியைச் சந்தித்து உரையாடியபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளதாக சனாதிபதி செயலகம் அறிவித்துள்ளது.**

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவும் சனாதிபதி சந்திரிகாவும் நேற்று முன்தினம் இரண்டு மணித்தியாலங்கள் சந்தித்து உரையாடியுள்ளனர்.

சமாதானப் பேச்சுவார்த்தைகள் உட்பட முக்கியமான பல விடயங்கள் ஆராயப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது. இது குறித்து சனாதிபதி செயலகம் தகவல் தருகையில்;

வட-கிழக்கு மாகாணத்திற்கான இடைக்கால நிர்வாகம் பற்றிய பல தகவல்களைப் பிரதமர் தெரிவித்துள்ளார் எனவும், இடைக்கால நிர்வாகம் பற்றிய சகலவிதமான பிரேரணைகளும் பூர்த்தி செய்யப்படவில்லையெனவும், இவை முழு அளவில் தயாரிக்கப்பட்டவுடன் புலிகளின் கருத்துக்களைப் பெறுவதற்கு அவர்களிடம் அனுப்பிவைக்கப்படும் எனப் பிரதமர் கூறியுள்ளதாகத் தெரிவித்துள்ளது.

(08ஆம் பக்கம் பார்க்க)

## பாரவூர்தி குடைசாய்ந்தது; பயணம் செய்த ஒருவர் பலி!

(வவுனியா)

வவுனியா நொச்சிமோட்டைப் பகுதியில் நேற்று 4.00 மணியளவில் பாரவூர்தி விபத்துக்குள்ளானதில் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

சீமேந்து ஏற்றி வந்த பாரவூர்தி பாதையை விட்டு விலகித் தடம் புரண்டமையால் அதில் பயணம் செய்த சுப்பிரமணியம் என்பவர் உடல் நசிந்து அவ்விடத்திலேயே உயிரிழந்தார். பாரவூர்தி தடம் புரள்வதற்கு முன்னர் இவர் பாரவூர்தியை விட்டுப்பாய முற்பட்டதாகவும் தெரிய வருகிறது.

### வவுனியா ஜோசப் முகாமில்

## பாதுகாப்பு நிலவரம் குறித்து ஒஸ்ரின் தலைமையில் ஆராய்வு

(வவுனியா)

வவுனியாவில் பாதுகாப்பு நிலவரங்கள் தொடர்பான கலந்துரையாடல் நேற்று சிறிலங்கா பாதுகாப்பமைச்சின் செயலர் ஒஸ்ரின் பெர்னாண்டோ தலைமையில் வவுனியா யோசப் படைமுகாமில் நடைபெற்றுள்ளது.

ஒஸ்ரின் பெர்னாண்டோ, நிதியமைச்சின் செயலர் சரித்த ரத்வத்தை ஆகியோர் நேற்றுக்காலை வவுனியாவிற்குச் சென்று நிலைமைகளை ஆராய்ந்துள்ளதுடன் அங்குள்ள

(08ஆம் பக்கம் பார்க்க)



### பருத்தித்துறை இறங்குதுறையில்

## படையினரின் புதிய கெடுபிடியினால் தொழிலாளர்கள் வேலை நிறுத்தம்

### கப்பலில் இருந்து பொருட்கள் இறக்குதல் பாதிப்பு

(யாழ்ப்பாணம்,வடமராட்சி)

பருத்தித்துறை இறங்குதுறையில் பொருட்களை ஏற்றி இறக்கும் பணியில் ஈடுபட்டு வரும் தொழிலாளர் மீது படையினர் மேற்கொண்டு வரும் புதிய கெடுபிடி நடவடிக்கைகளையடுத்து தொழிலாளர்கள் நேற்று முதல் வேலை பகிஷ்கரிப்புப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

இதனால் நேற்று இரண்டாயிரம் மெற்றிக் தொன் சீனி உட்பட இதர நிவாரணப்பொருட்களுடன் சென்ற கப்பலில் இருந்து பொருட்களை இறக்கும் பணி இடம் பெறாததால் கப்பல் காங்கேசன்துறை துறைமுகத்திற்குக் கொண்டு செல்லப்பட்டுள்ளது.

இதுவரை காலமும் படையினரின் அதியுயர் பாதுகாப்பு வலயத்தில் அமைந்துள்ள பருத்தித்துறை

(08ஆம் பக்கம் பார்க்க)

## குடத்தனைக் கரையோரத்தில் கடற்படை போடும் முட்கம்பி வேலி!

### மீனவர்கள் பெரும் பாதிப்பு

(வடமராட்சி)

வடமராட்சி குடத்தனைப் பகுதியில் உள்ள பொற்பதி கடற்தொழிலாளர் கூட்டுறவுச் சங்க சமாசத்திற்கு எனப் பிரிக்கப்பட்டுள்ள கடற்கரைப் பகுதியில் கடற்படையினர் தொடர் முட்கம்பி வேலிகளையும், காப்பரண்களையும் அமைத்து வருகின்றனர். இதனால், மீனவர்கள் கடற்தொழிலுக்குச் செல்ல முடியாது பெரும் இன்னல்களை எதிர் கொண்டுள்ளனர்.

முட்கம்பி வேலிகளின் இடையில் சிறுசிறு பாதைகள் மட்டுமே கடலுக்குள் நுழைவதற்கு வசதியாக விடப்பட்டுள்ளது. இதனால், படகினைக் கரை ஒதுக்குவதிலும் கடலுக்குள் செலுத்துவதிலும் போக்குவரவு செய்வதிலும் கடற்தொழிலாளர்கள் பெரும் இன்னல்களை எதிர் கொள்கின்றனர்.

பெருமளவு மரக்குற்றிகளும்,

(08ஆம் பக்கம் பார்க்க)



மட்டக்களப்பில் மகளிர் அமைப்புகளின் பிரதிநிதிகள் மத்தியில் கேணல் கருணா உரை நிகழ்த்துவதையும், நிகழ்வில் கலந்து கொண்டோரில் ஒரு பகுதியினரையும் படங்களில் காணலாம்.

## கிளிநொச்சியில் நாளை 'வன்னி ரெக்' திறப்பு

(அலுவலக செய்தியாளர்)

சர்வதேச தமிழ் தொழில் நுட்பவியலாளர் கழகத்தினால் நிறுவப்பட்டுள்ள 'வன்னி ரெக்' நாளை கிளிநொச்சியில் திறந்து வைக்கப்படவுள்ளது. இங்கு முதற்கட்டமாக 60 பேர் சேர்த்துக் கொள்ளப்படவுள்ளனர். சர்வதேச தொழில் நுட்பவியலாளர் கழகம் அமெரிக்காவில்

(08ஆம் பக்கம் பார்க்க)



## தமது விடுதலையை பெண்கள் தாமே தீர்மானிக்க வேண்டும்!

### மூத்த தளபதி கேணல் கருணா

பெண்கள் விடுதலையைப் பெண்களே தீர்மானிக்க வேண்டுமென மூத்த தளபதி கேணல் கருணா தெரிவித்துள்ளார். மட்டக்களப்பு மாவட்டத்தில் பெண்கள் எழுச்சி தொடர்பாக மகளிர் அமைப்புக்களின் பிரதிநிதிகளைச் சந்தித்து உரை நிகழ்த்தும் போது அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

நேற்று முன்தினம் இடம்பெற்ற இச்சந்திப்பில் பெண்கள் எதிர் நோக்குகின்ற பிரச்சினைகள் பற்றி கேட்டறிந்துள்ளதுடன் சமூகத்தில் பெண்கள் மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் குறித்தும் அவர் விளக்கியுள்ளார். இதனைத் தொடர்ந்து அங்கு கலந்து கொண்ட பெண்கள் அமைப்புக்களின் பிரதிநிதிகள் கருத்துக் கூறுகையில்: தாம் ஆண்களுக்குச் சமமாக சகல செயற்பாடுகளிலும் ஈடுபடவுள்ளதாகவும், எதிர்காலத்தில் தாமே சுயமாகச் சிந்தித்து தமது விடுதலைக்காக பாடுபடவுள்ளதாகவும் தெரிவித்துள்ளனர்.

## வரிவிளம்பரம்

### விற்பனைக்கு

புதிதாக வாங்கி சிறிதுகாலம் பாவிக்கப்பட்ட கறுப்பு வெள்ளை T.V. அன்ரனா, வயர், பற்றரி 90, பைப் உடன் விற்பனைக்குண்டு. பார்வையிடுபவர்கள் மதியம் 1 மணிக்கு வரவும். மது மருந்தகம், முருகன் கோவிலடி, கிளிநொச்சி. (3338)

### விவசாயிகளே!

உங்கள் வீட்டுத்தோட்டத்தை வளமாக்கத்தேவையான தென்னை, பலா, மாதுளை, எலுமிச்சை (தேசி), கமுகு, கொய்யா, கொடித் தோடை, தோடை, சவுக்கு மற்றும் பல தரமான நல்லின நாற்றுக்களைக் குறைந்த விலையில் நீங்கள் பெறுவதற்கு இன்றே நாடுங்கள். ஒருங்கிணைந்த மாதிரிப் பண்ணை, வட்டக்கச்சி. (3275)


# உள்ளூராட்சித் தேர்தல் சட்ட மூலத்தை திருத்தங்களுடன் சமர்ப்பிக்க அரசு முடிவு

(கொழும்பு)

வடக்கு-கிழக்கிற்கான உள்ளூராட்சித் தேர்தல் சட்ட மூலத்தை சில திருத்தங்களுடன் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்க சிறிலங்கா அரசு திட்டமிட்டுள்ளது.

உள்ளூராட்சித் தேர்தல் திருத்தச் சட்ட மூலத்தின் சில பிரிவுகள் அரசியல் யாப்பினை மீறுவதாக அமைந்துள்ளதாகவும் இச்சட்ட மூலத்தை நாடாளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பெரும்பான்மை பெற்றே நிறைவேற்ற முடியும் என்றும் அண்மையில் உயர் நீதி மன்றம் தீர்ப்பளித்ததை அடுத்தே சிறிலங்கா அரசு இந்த முடிவை எடுத்துள்ளது.

## கரைச்சிக் கோட்ட பாடசாலைகள் தமிழ் மொழித்திறன் போட்டிகள்

(அலுவலக செய்தியாளர்)

கரைச்சிக் கோட்டப் பாடசாலைகளுக்கிடையிலான தமிழ்த்தினப் போட்டியின் இறுதி நாள் நிகழ்வுகள் நேற்று கிளிநொச்சி மகாவித்தியாலயத்தில் நடைபெற்றன.

கோட்டக்கல்வி அலுவலர் வி.சிற்றம்பலம் தலைமையில் நடைபெற்ற இப்போட்டியில் கரைச்சிக் கோட்டப் பாடசாலைகளைச் சேர்ந்த 34 பாடசாலை மாணவ மாணவிகளின் 50 நிகழ்வுகள் இடம்பெற்றன.

மொழித்திறன், இசைநடன, நாட்டிய, நாடகம் ஆகிய போட்டி நிகழ்வுகள் இடம் பெற்றன.

மேற்படி நிகழ்ச்சிகளில் முதலாமிடத்தினைப் பெறும் நிகழ்ச்சிகள் வலய மட்ட நிகழ்ச்சிகளுக்கு தெரிவு செய்யப்பெறுமென போட்டி ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர்.

கடந்த மூன்று தினங்களாக மேற்படி தமிழ்த்தினப் போட்டி நிகழ்வுகள் கிளி. ம.வியில் இடம் பெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (சோ)



## வற்றாப்பளை காட்டுப்பகுதியில் அழுகிய நிலையில் சடலம் மீட்பு

(முள்ளியவளை)

வற்றாப்பளை ஆனைவிழுந்தான் காட்டுப்பகுதியில் அழுகிய நிலையில் ஆணின் சடலமொன்று கண்டு பிடிக்கப்பட்டுள்ளது.

அப்பகுதியில் காட்டுக்கு வேட்டைக்காகச் சென்ற ஒருவர் இச்சடலத்தைக் கண்டு தெரியப்படுத்தினார்.

இச்சடலம் தொடர்பாக முள்ளியவளை காவல்ப்பணிமனையினர் நடவடிக்கை எடுத்துள்ளனர் நேற்று முன்தினம் இப்பகுதிக்கு மரண விசாரணை அதிகாரி சகிதம் சென்ற காவல் பணிமனைப்பொறுப்பாளர் விசாரணையை மேற்கொண்டார்.

இவர் தொடர்பான விபரம் எதுவும் தெரியாதுள்ளதால் விபரம் தெரிந்தவர்கள் முள்ளியவளை காவல் பணிமனையில் தொடர்பு கொள்ளுமாறு காவல் பணிமனைப் பொறுப்பதிகாரி கேட்டுள்ளார்.

இச் சடலத்துக்கு அருகில் பிச்சைப் பாத்திரம், பிச்சைப் பை என்பன இருந்துள்ளன (ஆ)

## கொடுப்பனவு

(அலுவலக செய்தியாளர்)

பரந்தன் இரசாயனக் கூட்டுத்தாபன ஊழியர்களுக்கான கொடுப்பனவு வழங்கப்படவுள்ளது.

மேற்படி ஊழியர்களுக்கான கொடுப்பனவு 23ஆம் திகதி முதல் 26ஆம் திகதி வரை கிளிநொச்சி நம்பியா மைதிலி களஞ்சியத்தில் வழங்கப்படும் என கூட்டுத்தாபன தொழில் முகாமையாளர் கா.சிவபாதசுந்தரம் தெரிவித்துள்ளார். (பா)

## விளையாட்டு விழா

விசுவமடு மத்தியமுன்பள்ளியின் வருடாந்த விளையாட்டு விழாஇன்று பி.ப2.00 மணிக்கு விசுவமடு ம.வி மைதானத்தில் நடைபெறவுள்ளது. (14)

## துயர் பகிர்வோம்

### அமரர் திரு. சி. குழந்தைவேல்

எமது காரியாலய அலுவலக பணியாளர் திரு. கு. குமாரசாமி அவர்களின் அன்புத் தந்தையார் திரு. சி. குழந்தைவேலு அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தாருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்ளும் அதேவேளை, அன்னாரின் 31ஆம் நாள் நினைவில் அவரின் ஆத்ம சாந்திக்காகவும் பிரார்த்தனை செய்கின்றோம்.

தகவல்: அலுவலர்,
நலன்புரிச் சங்கம்,
கச்சேரி, முல்லைத்தீவு.

(சி-7755)

## கணினி அன்பளிப்பு

முள்ளியவளை கலைமகள் வித்தியாலயத்திற்கு பழைய மாணவர்கள் புதிய கணினி ஒன்றை அன்பளிப்புச் செய்துள்ளனர்.

மேற்படி வித்தியாலயத்தில் கல்வி கற்று தற்போது நோர்வே நாட்டில் உள்ள பழைய மாணவர்களே இக்கணினியினை அன்பளிப்புச் செய்துள்ளனர்.

வித்தியாலயத்தில் மாணவர்களுக்கு கற்பிப்பதற்காக ஒரு கணினி இருந்தது. தற்போது இக்கணினி அன்பளிப்பினால் மாணவர்கள் மேலும் கணினி கற்றுக் கொள்ள வசதியாகவுள்ளது எனவும், இக்கணினியினை அன்பளிப்புச் செய்த நோர்வேயில் உள்ள தமது வித்தியாலய பழைய மாணவர்களுக்கு அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள் நன்றி தெரிவித்துள்ளதாகவும் வித்தியாலய அதிபர் தெரிவித்துள்ளார். (ஆ)


### ஆண்டு நிறைவு விழாவை முன்னிட்டு

## குருகுலம், காந்திநிலைய சிறார்கள் பல்வேறு இடங்களில் சிரமதானப்பணி

(அலுவலக செய்தியாளர்)

நாளை நடைபெறவுள்ள குருகுலம் சிறுவர் பராமரிப்பு நிலையம், காந்தி இல்லம் ஆகியவற்றின் ஆண்டு நிறைவு விழாவை முன்னிட்டு நேற்றுக்காலை பல சிரமதான நிகழ்வுள் இடம் பெற்றுள்ளன. பிரதி மாகாண சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை, அமரர் கந்தசாமி ஞாபகார்த்த பாடசாலை மாணவர்களுக்கான பற்சிகிச்சை நிலையம், மலேரியாத் தடுப்பு நிலையம், தாய் சேய் சிகிச்சை நிலையம் ஆகியவற்றுடன் பிற்பகல் 3 மணிக்கு கிளிநொச்சி மாவீரர் துயிலும் இல்லமும் சிரமதானப் பணி மூலம் துப்புரவு செய்யப்பட்டுள்ளது.

மேற்படி சிரமதானப் பணியில் ஈடுபட்ட சிறுவர் இல்லச் சிறுவர்களைக் கேட்டபோது நாங்கள் எமது உறவுகளைப் பிரிந்து வாழ வழி தெரியாது தவித்தபோது எமக்கு வாழ்வு தேடி தருவதற்காகத் தமது உயிர்களைத் தியாகம் செய்த அந்த மறவர்கள் வாழ்கின்ற இல்லத்தை நாம் எப்போதுமே தாய்மையாகப் போற்றுவோம். நாங்கள் மட்டும் அல்ல, தமிழர்கள் எல்லோருமே போற்றி வழிபட வேண்டும் எனத் தெரிவித்தனர். (பா)




## நீங்காத நினைவில்...

### அமரர்களான



பிறப்பு
1940.05.10
1947.09.17

இறப்பு
1986.03.23
1996.04.05



திரு.பெ.அகஸ்ரின்

திருமதி.அ.திரேசம்மா



பிறப்பு
1980
12
17

இறப்பு
2000
06
21

### செல்வி. அ.சுதர்ஜினி (ஓவியா)

தந்தை கனவு சுமந்தார்
அன்னையவள் கருவில் சுமந்தாள்
கனவுகள் நனவாகுமுன்பே
கனவாகப் போய்விட்ட அப்பா!

தந்தையுமாய்த் தானிருந்து
அன்னையவள் அரவணைத்தாள்
விந்தையாய் வந்த காலன்
விரைந்தவளையும் கொண்டு சென்றான்!

எஞ்சிய கனவு சுமந்து
எல்லோரும் சேர்ந்திருந்தோம்
கொஞ்சிய சிறுநிலவொன்றோ
கொடுமையாய்த் தேய்ந்ததின்று!

மாளம் எனும் தீயிலே
எரிகின்ற உம் நினைவுகள்
மறக்கவும் முடியவில்லை - எம்
சோகமும் தணியவில்லை!

எம் உணர்வது மறக்கும் வரை
உம் நினைவுகள் நிலைத்திருக்கும்
உங்கள் ஆன்மா அமைதி பெற
என்றும் இறைவனை வேண்டுகிறோம்.

குடும்பத்தினர்,
213, சிவசுந்தரம் வீதி, வட்டக்கச்சி.

(3340)


## கண்டாவளை பி.செ.பிரிவில் கிராம வீதிகள் புனரமைப்பு

கண்டாவளை பிரதேச செயலர் பிரிவில் உள்ள கிராமங்களில் வீதிகள் புனரமைப்பு வேலைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இந்த வேலைகளுக்காக உணவுப்பொருட்களை உலக உணவுத்திட்டத்தினர் வழங்க இருப்பதாகவும் தெரியவருகிறது.

புதிய புன்னைநீராவி வீதி, கண்டாவளை பன்றிசுட்டான் வடக்கு வீதி, பெரியகுளம் கட்டைக்காடு வீதி, தருமபுரம் கிழக்கு மேற்கு வீதி,ஊரியான் வீதி, கல்மடு நகர் பெரியகுளம் வீதி ஆகியவற்றுக்கான புனரமைப்பு வேலைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

ஏனைய கிராமங்களிலும் உணவுடனான வேலைத்திட்டத்தில் வீதி புனர் அமைப்பு வேலைகள் நடைபெற இருப்பதாகவும் கிராம மக்கள் தமது வீதிகளைத்தாமே புனர் அமைப்பு செய்வதற்கு உலக உணவுத்திட்டத்தினர் உலர் உணவுப் பொருட்களை வழங்க இருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இது போன்ற வேலைகள் பளைப் பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள கிராமங்களிலும், கிளிநொச்சி கரைச்சிப் பிரதேச செயலர் பிரிவில் உள்ள கிராமங்களிலும் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும் இவ் வேலைகள் அவசர அபிவிருத்திப் புனர்வாழ்வு வேலைத்திட்டத்தின் கீழ் நடைபெறுவதாகவும் 18 வயதிற்கு உட்பட்டவர்கள் இந்த வேலைத் திட்டத்தில் சேர்த்துக்கொள்ளப்பட மாட்டார்கள் எனவும் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். (14)

## பிறப்பு, இறப்பு பதிவு

கண்டாவளைப் பிரதேச செயலர் பிரிவிலுள்ள பிறப்பு, இறப்புப் பதிவுகளை இதுவரை காலமும் மேற்கொள்ளாதவர்கள் தமது பகுதி கிராம சேவகர்களுடன் தொடர்பு கொண்டு விண்ணப்பப்படிவத்தைப் பெற்று பூர்த்தி செய்து உடன் கிராம சேவையாளரிடம் ஒப்படைக்குமாறு பிரதேச செயலாளர் பி.கா.மத்தியாஸ் அறிவித்துள்ளார். இப்பகுதிக்கு இது தொடர்பாக அதிகாரிகள் வெகு விரைவில் வருகைதந்து பதிவினை மேற்கொள்ளவுள்ளதாகவும் பிரதேச செயலாளர் மேலும் தெரிவித்துள்ளார். (14)


## பணிநிலை வேண்டுகை

டாக்டர் பொன்னம்பலம் ஞாபகார்த்த (தனியார்) மருத்துவமனை கிளிநொச்சி

1) வைத்தியசாலை சுத்திகரிப்பாளர்கள்.

2) வைத்தியசாலை உதவியாளர்கள்

போன்ற பணிகளுக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

விண்ணப்ப முடிவுத்திகதி 04. 07. 2003

நிர்வாகம்,
டாக்டர் பொன்னம்பலம் ஞாபகார்த்த
(தனியார்) மருத்துவமனை,
கிளிநொச்சி.

(சி-8178)

# அல்-கெய்தா தீவிரவாதிகள் அச்சுறுத்தல்; கென்ய அமெரிக்க தூதரகத்திற்கு மூடுவிழா!

(நைரோபி)

கென்யாவிலுள்ள அமெரிக்கத் தூதரகம் மீது தாக்குதலை நடத்த ஒஸாமா பின்லேடனின் அல்-கெய்தா தீவிரவாத இயக்கம் திட்டமிட்டிருப்பது தெரிய வந்ததையடுத்து, அந்தத் தூதரகம் மூடப்பட்டுள்ளது.

கென்யா, சூடான், தன்சானியா போன்ற நாடுகளிலுள்ள அமெரிக்கத் தூதரகங்களின் மீது ஒஸாமா பின்லேடனின் அல்-கெய்தா தீவிரவாதிகள் கடந்த சில ஆண்டுகளுக்கு முன் தாக்குதல்கள் நடத்தியுள்ளனர்.

இத்தாக்குதல்களில் 250ற்கும் மேற்பட்டோர் கொல்லப்பட்டனர். அதன் பின்னர் பல நாடுகளிலுள்ள அமெரிக்காவின் அரச கட்டடங்கள் மீது அந்த அமைப்பினர் தாக்குதல் நடத்தி வருகின்றனர்.

இந்த நிலையில் கென்யாவின் தலைநகர் நைரோபியிலுள்ள அமெரிக்கத் தூதரகம் மீது மீண்டும் தாக்குதல் நடத்த அல்-கெய்தா தீவிரவாதிகள் திட்டமிட்டிருப்பதாக, அமெரிக்க உளவு நிறுவனங்களுக்குத் தகவல் கிடைத்துள்ளன.

இதனையடுத்து கென்யாவிலுள்ள அமெரிக்கத் தூதரகம் மூடப்பட்டதுடன், பலத்த பாதுகாப்பும் போடப்பட்டுள்ளது.



மேற்குக்கரை நேப்ளஸ் நகரில் யூதக் குடியேற்றவாசி இளைஞனை கைது செய்யும் இஸ்ரேலியப் பொலிசார்.

## நக்கீரனின் நீதிமன்ற காவல் நீடிப்பு!

(சென்னை)

பொடோ சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்ட நக்கீரன் பத்திரிகை ஆசிரியர் கோபாலின் நீதிமன்றக் காவல் அடுத்த மாதம் 07ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளது.

பூந்தமல்லி பொடோ நீதிமன்றத்தில் நேற்று முன்தினம் ஆஜர்படுத்தப்பட்ட அவரது நீதிமன்றக் காவலை நீடிக்க நீதிபதி என். ராஜேந்திரன் உத்தரவிட்டுள்ளார்.

சட்ட விரோதமாக துப்பாக்கி வைத்திருந்ததாக அவர் மீது குற்றம் சாட்டப்பட்டு கடந்த ஏப்ரல் மாதம் 12ஆம் திகதி நக்கீரன் கோபால் கைது செய்யப்பட்டார்.

# மத்திய கிழக்கு சமாதான திட்டத்தின் தேக்க நிலையில் முன்னேற்றமில்லை!

## - கொலின் பவலின் சமரச முயற்சி தோல்வி

**மத்திய கிழக்கு பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கான புதிய சமாதானத் திட்டம் ஒன்றில் ஏற்பட்டுள்ள ஸ்தம்பித நிலையைப் போக்குவதற்கு அமெரிக்க வெளியுறவு அமைச்சர் கொலின் பவல் மேற்கொண்ட முயற்சி தோல்வியில் முடிவடைந்துள்ளது.**

சமாதான முயற்சிகள் தொடர்பாகச் சலிப்படைந்துள்ள இஸ்ரேலிய அதிகாரிகளையும் பலஸ்தீன அதிகாரிகளையும் மீண்டும் தீவிரமாக சமாதான நடவடிக்கைகளை முன்னெடுக்குமாறு அமெரிக்க அமைச்சர் கொலின் பவல் வலியுறுத்தியுள்ளார்.

வன்செயல்கள் மீண்டும் ஆரம்பமாகியுள்ள இவ்வேளையில் அமெரிக்க ஆதரவிலான சமாதானத் திட்டத்தைப் புதுப்பிக்கும் முயற்சியில் அமெரிக்க அமைச்சர் கொலின் பவல் இஸ்ரேலிய பலஸ்தீனத் தலைவர்களை நேற்று முன்தினம் சந்தித்துள்ளார்.

கடைசியாக இடம்பெற்ற மோதலில் மேற்குகரையில் யூதக் குடியேற்ற வாசி ஒருவர் கொல்லப்பட்டதுடன் பலஸ்தீன தீவிரவாதிகள் மூவர் காயமடைந்துள்ளனர்.

இந்த தாக்குதலுக்கு தாமே காரணம் என்று கமாஸ் தீவிரவாத அமைப்பு தெரிவித்துள்ளது.

காயமடைந்தவர்களில் இருவர் தங்கள் உறவினர்களை பார்ப்பதற்காகச் சென்ற வயது முதிர்ந்த அமெரிக்க பிரஜைகள் ஆவர்.

எனினும், அமெரிக்க சனாதிபதி ஜோர்ஜ்டபிள்யூ புஷ் சமாதானத்தை ஏற்படுத்தும் முயற்சிகளில் உறுதியாக இருப்பதாக தெரிவிக்கப்படுகிறது.

## மிகையொலி விமானம் சோதனை

(புதுடில்லி)

உள் நாட்டில் உற்பத்தி செய் யுப்படும் ஒலியை விட வேகமாக செல்லக் கூடிய பேயேஸ் எனும் போர் விமானம் அடுத்த இரண்டு வாரங்களில் பறக்கும் சோதனைகளில் ஈடுபடுத்தப்படும் என்று இந்திய பாதுகாப்பு அமைச்சரின் அறிவியல் ஆலோசகர் வி.கே. ஆர்த்திரே, பெங்களூரில் செய்தியாளர்களிடம் கூறியுள்ளார்.

ஏற்கனவே இரண்டு முறை தொழில் நுட்ப முறை ஆய்வுக்காக இந்த விமானம் சோதித்துப்பார்க்கப்பட்டதாகவும் அவர் கூறியுள்ளார்.



கம்போடியாவின் நோம்பென் நகருக்குச் செல்லும் பிரதான பாதையில் ஒரு மோட்டார் சைக்கிளில் இவ்வளவு சுமையையும் ஏற்றி செல்லும் இருவர் (போக்குவரத்து விதிகளையோ, தமது பாதுகாப்பையோ கருதவில்லை)

# நாடுதிரும்ப அகதிகள் முண்டியடிப்பு; நிலைமையை சீராக்க இராணுவம் தாக்குதல்!

(கானா)

நைஜீரியா நாட்டில் தங்கியுள்ள ஆயிரக் கணக்கான கானா நாட்டு அகதிகள் தாயகம் திரும்புவதற்கு ஏற்பாடுகள் நடைபெறும் சமயத்தில் அங்கு முண்டியடிக்கும் மக்கள் மத்தியில் அமைதியை நிலைநாட்டுவதற்காக இராணுவத்தினர் கடும் தாக்குதல்களில் ஈடுபட்டனர்.

ஆபிரிக்க நாடான கானாவில் கடந்த 14 ஆண்டு காலமாக உள்நாட்டுப் போர் நடைபெற்று வருகின்றது. இப்போரில் இரண்டு இலட்சத்திற்கும் மேற்பட்டவர்கள் உயிரிழந்துள்ளனர். ஏராளமான மக்கள் அகதிகளாக அயல்நாடான நைஜீரியாவில் தஞ்சம் புகுந்துள்ளனர்.

தற்போது கானா அரசுக்கும் தீவிரவாதிகளுக்குமிடையே போர் நிறுத்த ஒப்பந்தம் ஏற்பட்டுள்ளது.

இதனையடுத்து நைஜீரியாவில் தங்கியுள்ள அகதிகள் தாயகம் செல்ல விருப்பம் தெரிவித்துள்ளனர்.

இதனைத் தொடர்ந்து அமெரிக்காவின் பயணிகள் கப்பல் ஒன்று நைஜீரியாவிற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

முதல்கட்டமாக பெண்களும் குழந்தைகளும் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

கப்பலில் ஏறுவதற்காக ஆண்கள் முயற்சித்த போது பாதுகாப்புப் படையினர் அவர்களைத் துப்பாக்கியினால் அடித்து துன்புறுத்தியுள்ளனர்.

இதனால் அங்கு பாதுகாப்பு படையினருடன் மோதல் ஏற்பட்டதால் அங்கு அமைதியை ஏற்படுத்த பாதுகாப்பு படையினர் கண்மூடித்தனமாக தாக்குதலில் ஈடுபட்டனர்.

இதன் காரணமாக அங்கு பெரும் பதட்டம் ஏற்பட்டுள்ளது.

# உலகமயமாக்கல் கொள்கையை ஆராயும் ஐரோப்பிய மாநாட்டிற்கு எதிர்ப்பு!

## - கிரேக்கத்தில் ஆயிரக்கணக்கானோர் ஆர்ப்பாட்டம்

(ஏதென்ஸ்)

கிரேக்கத்தில் நடைபெறும் ஐரோப்பிய நாடுகளின் தலைவர்கள் கலந்துகொண்ட உலகமயமாக்கல் கொள்கை பற்றிய மாநாட்டிற்கு எதிராக அங்கு பெரும் கலவரம் வெடித்துள்ளது.

ஐரோப்பிய நாடுகளைச் சேர்ந்த தலைவர்கள் கலந்து கொள்ளும் முதல் திட்டவரைபு மாநாடு கிரேகத்தில் நடைபெற்று வருகின்றது.

உலக மயமாக்கல் உள்ளிட்ட பல்வேறு பிரச்சினைகளை ஆராயும் இம்மாநாட்டிற்கு ஏறத்தாழ நான்காயிரத்துக்கும் மேற்பட்ட ஆர்பாட்டக்காரர்கள் பெரும் ஆர்ப்பாட்டம் நடத்தினர்.

இப்போராட்டத்தை தடுக்க முயன்ற பொலிசார்மீது ஆர்ப்பாட்டக்காரர்கள் கற்களை வீசினர்.

இதனால் பொலிசார் கண்ணீர் புகைக் குண்டுகளை வீசி கூட்டத்தைக் கலைத்தனர்.

மாநாடு கூடிய இடத்திலிருந்து 5 கிலோமீற்றர் தொலைவில் இச்சம்பவங்கள் நடைபெற்றன

எனினும் பொலிசார் உரிய நேரத்தில் செயற்பட்டு ஆர்ப்பாட்டக்காரர்களின் ஆர்ப்பாட்டத்தை கட்டுப்படுத்தியுள்ளனர்.

# சட்டவிரோத குடியேறிகளின் கப்பல் விபத்தில் சிக்கியது!

## - 200 பேரின் தகவல் இல்லை

கினிசியா கடற்பரப்பில் ஆபிரிக்கர்களை ஏற்றிச்சென்ற சிறிய கப்பல் ஒன்று விபத்துக்குள்ளானதில் பன்னிரெண்டுபேர் உயிரிழந்துள்ளனர்.

இத்தாலிக்கு சட்டவிரோதமாகச் செல்லமுயன்றவர்களே இவ்வாறு உயிரிழந்ததாக ரொய்ட்டர் செய்தி நிறுவனம் தெரிவித்துள்ளது.

சுமார் 250ற்கு மேற்பட்ட ஆபிரிக்கர்களை ஏற்றிக்கொண்டு இந்தக் கப்பல் இத்தாலி சென்று கொண்டிருந்த வேளை இடை நடுவில் கவிழ்ந்து விபத்துக்குள்ளானது. இதில் 200 பேர் காணாமற்போயுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

அத்துடன் கடலில் தத்தளித்த 41பேர் மீட்புப் பணியாளர்களால் காப்பாற்றப்பட்டிருப்பதாக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.



ஹேமா-லென்டா தீவிரவாதிகளுக்கெதிராக கொங்கோ நாட்டில் போரிடும் பிரான்சிய விசேடப் படை வீரர் ஒருவர் மந்தைகளைக் கடந்து செல்கிறார்.

# செச்சினிய தீவிரவாதிகள் தாக்குதல்; 3 ரஷ்யப் பொலிசார் பலி!

## - ஏழுபேருக்குக் காயம்

(மொஸ்கோ)

செச்சினியத் தீவிரவாதிகள் வைத்த கண்ணிவெடி வெடித்தமையினால் ரஷ்ய பொலிசார் மூவர் கொல்லப்பட்டுள்ளனர்.07 பேர் காயமடைந்துள்ளனர்.

செச்சினியாவின் வடபகுதியில் உள்ள மெரீற்றியா எனுமிடத்தில் பேருந்தில் சென்று கொண்டிருந்தபோது தீவிரவாதிகள் மறைத்துவைத்திருந்த கண்ணிவெடி வெடித்துச் சிதறியுள்ளது.

அந்தப் பேருந்து முற்றிலும் சேதமடைந்துள்ளது.

இச்சம்பவத்தையடுத்து அப்பகுதியில் பொலிசார் முகாமிட்டு பாதுகாப்பு பணியில் ஈடுபட்டு வருகின்றனர்.

# விளையாட்டு அரங்கு

ஜெயந்திரன்

## சோதனைகளை சாதனைகளாக்கிய ஹெனின்

மகளிர் டெனிஸ் உலகில் கொடி கட்டிப் பறக்கும் அமெரிக்க வீராங்கனைகளான செரீனா வில்லியம்ஸ், வீனஸ் வில்லியம்ஸ் ஆகியோரின் ஆதிக்கத்துக்கு சவால்விடும் வகையில் பெல்ஜியம் வீராங்கனைகளான கிம்கிளிஸ்டர்ஸ் ஜஸ்ரின் ஹெனின் உருவாகியுள்ளனர்.

அண்மையில் நடைபெற்று முடிந்த



பிரெஞ்ச் ஓப்பன் டென்னிஸ் போட்டியின் இறுதி ஆட்டத்துக்கு சகோதரிகள் இருவருமே தகுதிபெறவில்லை. ஆனால் இதற்கு முன்னர் 4 கிராண்ட் ஸ்லாம் போட்டிகளின் இறுதி ஆட்டங்களிலும் சகோதரியான வீனஸ் வில்லியம்ஸை வீழ்த்தி செரீனா பட்டம் வென்றார்.

அத்தகைய நிலையில் சகோதரிக்கு சவால் விடும் வகையில் யாராவது விளையாட முடியும் என்று கற்பனை செய்துகூட பார்க்கமுடியாத அளவுக்கு சகோதரிகளின் ஆட்டம் உச்சநிலையில் இருந்தது.

எனினும் பிரெஞ்ச் ஓப்பனில் செரீனாவின் ஆதிக்கத்திற்கு ஹெனின் முற்றுப்புள்ளி வைத்தார். தற்போதைய ஆட்டத்தை வைத்துப்பார்க்கும் போது விம்பிள்டனிலும் பெல்ஜியம் வீராங்கனைகள் வில்லியம் சகோதரிகளுக்கு கடும் சவாலாகவே விளங்குவார்கள் என்றே தோன்றுகிறது.

ஒன்பது ஆண்டுகளுக்கு முன்னதாக தாயை இழந்தவர் ஜஸ்ரின் ஹெனின் இரண்டு ஆண்டுகளுக்கு முன் விம்பிள்டன் இறுதியாட்டத்தில் வீனஸ் வில்லியத்திடம் தோற்றுப்போனார். அதற்கு முன்னதாக இறுதி ஆட்டம் நடைபெற்ற அதேநாளில் அவரது தாத்தா இறந்தசெய்தி அவரைத் தாக்கியது. தந்தையும் ஹெனினை விட்டு பிரிந்துவிட்டார்.

எனினும் சோதனைகளை சாதனைகளாக்கும் முயற்சியில் டெனிஸில் தீவிர கவனம் செலுத்தினார் ஹெனின். அதன் பலன் யாரும் எதிர்பாராத அளவில் அரையிறுதியில் செரீனாவை வென்றதுடன் கிளிஸ்டர்சையும் நேர் செற்றில் வீழ்த்தி பிரெஞ்ச் ஓப்பன் சம்பியனானார்.

இவ்வெற்றி மூலம் விம்பிள்டன் தரவரிசையில் வீனஸ் வில்லியம்ஸை பின்னுக்குத்தள்ளி இரண்டாம் இடத்தை கிளிஸ்டர்சும், மூன்றாம் இடத்தை ஹெனினும் பிடித்துள்ளனர்.

ஹெனின், கிளிஸ்டர்ஸ் ஆகியோரின் சிறப்பான ஆட்டம் சகோதரிகளின் ஆதிக்கத்துக்கு சவால்விடும் வகையில் அமைந்துள்ளது. டென்னிஸ் ஆர்வலர்களுக்கு மேலும் ஆர்வத்தை அதிகரித்துள்ளது.

## குங்ஃபூவும் புரூஸ்லீயின் பயிற்சியும்

சுமார் 400 ஆண்டுகளுக்கு முன் தென் சீனாவில் ப்யூட்ஷான். என்ற ஊரில் வாழ்ந்த இளம் பெண் மருத்துவர் லெயூங்சூன் என்பவர் விங்சூகுங்ஃபூ (Ving tus kungfu) ஐக் கண்டுபிடித்தார். பிறகு அவருடைய இந்தப் புதிய வீரக்கலை அவரது சீடர்கள் வழிவழியாக போதிக்கப்பட்டு வந்தது.

காலஞ்சென்ற இப்மான் என்பவர் ஜோசின்வா என்பவரிடம் இந்தக் கலையை பயின்றார். இப்மானின் தீவிர முயற்சியினால் மத்திய சீனாவில் இருந்து பிரிட்டிஸ் காலணி நாடான ஹொங்கொங் வரையிலும் இது பரவியது.

முதல் பத்தாண்டு வரையிலும் இந்தப் புதிய பாணியை போதிக்க தகுதிவாய்ந்த பயிற்சியாளர் இப்மானுக்கு கிடைக்கவேயில்லை. எனினும் மற்றப் பாணிகளை பின்பற்றும் சிலரால் மதிப்பும் புகழும் ஏற்பட்டன. அத்தோடு வேறுசில சவால்கள் காரணமாக இப்மானின் மாணவர் குழு ஒன்று எப்போதும் தயாராக போட்டிக்குக் காத்திருந்தது.

இந்தச் சமயத்தில் தன் பயிற்சியை திரு இப்மானிடம் முடித்த புரூஸ்லீ அமெரிக்க ஐக்கிய நாடுகளில் இந்தப் புதிய பாணியில் செயற்திறனை அறிமுகப்படுத்தினார் இவர் பயிற்சி பெற்ற காலம் 1953இல் இருந்து நான்கு ஆண்டுகள் எனத் தெரிகின்றது.

லிங்சூகுங்ஃபூ பல நல்ல சிறந்த வீரக்கலைஞர்களை உருவாக்கியது. அத்தகைய சிறந்த பயிற்சியாளர்களில் ஒருவரான மோய்யாட் நியூயோர்க்கில் மிகப் புகழ்பெற்றவராக திகழ்ந்தார். இவருடைய பெயர் கல்வெட்டில் பொறிக்கும் அளவுக்கு வீரக்கலைகளில் இவரது சேவை முக்கியத்துவம் பெற்று விளங்குகின்றது. இவரும் இப்மானின்



குங்ஃபூ ஆசான் இப்மானிடம் புரூஸ்லி பயிற்சி பெறுகிறார்.

நெருங்கிய சீடர்களில் ஒருவர்.

மிகச் சிறியதும் சிறந்ததுமாக ஆகியிருந்த இந்தப் பாணி நாளடைவில் ஹொங்கொங் முழுவதும் பரவியது. இன்றைய நாளில் உலகிலேயே வீரக்கலைகளில் சிறந்ததாக குங்ஃபூ பெயர் பெற்றுவிட்டது.

## மேற்கிந்தியத்தீவு டெஸ்ட் தொடரை கைப்பற்றுமா? வலுவான நிலையில் சிறிலங்கா அணி

சொந்த மண்ணில் இறுதிப் போட்டிக்கு தகுதிபெறாத நிலையில் மேற்கிந்தியதீவு சுற்றுலாவை ஆரம்பித்த சிறிலங்காக் கிரிக்கெட் அணி மேற்கிந்தியத் தீவுகளுக்கு எதிரான ஒருநாள் போட்டித் தொடரை கைப்பற்றி பரபரப்பை ஏற்படுத்திய நிலையில் தற்போது இரண்டு போட்டிகளைக் கொண்ட டெஸ்ட் தொடரில் ஆடிவருகின்றது.

அவுஸ்திரேலியா அணியுடனான ஏழு போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடரில் கடைசி மூன்று போட்டிகளில் வெற்றி பெற்று ரசிகர்களை வியக்க வைத்த மேற்கிந்தியதீவு சிறிலங்கா அணியுடனான ஒருநாள் போட்டித் தொடரை இழந்த நிலையில் மேற்படி டெஸ்ட் தொடர் முக்கியத்துவம் பெறுகின்றது.

இரு நாட்டு அணிகளின் தலைமைத்துவங்களில் அண்மையில் மாற்றம் செய்யப்பட்ட நிலையில் இரு தலைவர்களும் தமது ஒரு டெஸ்ட் தொடர்களை எதிர் கொண்டுள்ளனர்.

இதில் சிறிலங்காவின் டெஸ்ட் அணித் தலைவர் ஹசான் திலகரட்ன தான் எதிர்கொண்ட நியூசிலாந்து அணியுடனான இரண்டு போட்டிகள் கொண்ட தொடரை சமன்செய்தும் பிறைன லாறா அவுஸ்திரேலிய அணியுடனான நான்கு போட்டிகள் கொண்டதொடரில் மூன்றில் தோல்வியடைந்து நான்காவது போட்டியில் சாதனையுடன் கூடிய வெற்றியையும் பெற்றுள்ளார்.

இந்நிலையில் இருநாட்டு அணிகளுக்கும் இடையிலான போட்டித்தொடர் சிறிலங்கா அணி மேற்கிந்தித்தீவுக்கு பயணமாகும் போது மேற்கிந்தித் தீவுக்கு சார்பாகவே எதிர்பார்க்கப்பட்டது. இவ் எதிர்பார்ப்பை ஒருநாள் போட்டித்தொடரில் பொய்யாக்கிய சிறிலங்கா அணி டெஸ்ட் போட்டியையும் வெற்றி கொள்ளும் நோக்கில் விளையாடும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

அதேவேளை ஒருநாள் போட்டித் தொடரில் ஏமாற்றம் அடைந்துவிட்ட மேற்கிந்தியதீவு டெஸ்ட் தொடரைக் கைப்பற்றுவதற்கு கடினமாக பாடுபடும் என்பதில் எதுவித ஐயமும் இல்லை.

இரு அணிகளிலும் இளம் வீரர்களை பெரும்பாலும் உள்



வாங்கியுள்ளதும் அவ்வீரர்கள் தமது திறமைகளை சிறப்பாக வெளிப்படுத்தி வருவதும் நடைபெற்றுவரும் டெஸ்ட் போட்டியை பரபரப்பானதாக மாற்றி அமைக்கலாம்.

சிறிலங்கா அணியைப் பொறுத்தவரை அணியின் துடுப்பாட்ட வரிசை பலவீனமான நிலையிலேயே காணப்படுகின்றது. ஒருநாள் போட்டித் தொடரின் இரண்டாவது போட்டியில் பாரிய இலக்கை எட்டிப்பிடித்த போதும் அதே நிலையை தொடர்ந்தும் தக்கவைப்பதில் துடுப்பாட்ட வீரர்கள் சிரமப்படுகின்றமை ஒரு குறையாகவே பார்க்கப்படுகின்றது. பெரும்பாலும் இளம் வீரர்களைக் கொண்டுள்ள மேற்கிந்தியதீவில் அதிரடியாட்டங்களை ஆடக்கூடிய வேவல்ஹிண்ட்ஸ், கெய்ல், சர்வான், லாறா, சாமுவேல், பவல் போன்ற பலமான துடுப்பாட்ட வரிசையின் உதவியுடன் மேற்கிந்தியதீவு பாரிய இலக்கை நோக்கிச்செல்லலாம். இதே நேரம் எந்த ஆடுகளத்தையும் தனக்குச் சாதகமாக மாற்றிக்கொள்ளும் திறமையுடன் பந்துவீசும் சுழற்பந்து வீச்சாளர் முத்தையா முரளிதரன் இவர்களுக்கு சிம்மசொர்ப்பனமாக விளங்குவார் எனவும் கூறப்படுகிறது. அதையே சிறிலங்கா அணியும் எதிர்பார்த்து நிற்கின்றது.

பிறைன்லாறாவோ அவுஸ்திரேலிய அணியைவிட சிறிலங்கா அணி பலம் பொருந்தியதல்ல எனவும் அவுஸ்திரேலிய அணியை தோற்கடிக்க முடிந்தமை தமது அணியின் பலத்தையும், மனோபலத்தையும் அதிகரிக்கச் செய்துள்ளதால் சிறிலங்கா அணியை எதிர்கொள்வதில் பிரச்சினைகள் இருக்காது எனத் தெரிவித்துள்ளார்.

எனினும் அவ்வணியில் அதிரடித் துடுப்பாட்ட வீரரான சந்திரபோல் பந்துவீச்சாளர் லோசன் ஆகியோர் இடம்பெறாதது பெரும் இழப்பாகவே நோக்கப்படுகிறது. ஏனெனில், இவர்களே அவுஸ்திரேலிய அணியை சாதனையுடன் வெல்வதற்கு பெரும் பங்கு வகித்திருந்தனர்.

இதேவேளை இப்போட்டியில் லாறாவா, முரளியா வெல்லப் போகின்றார்கள் என்ற கேள்வியும் எழுந்துள்ளது.

லாறா அவுஸ்திரேலியாவுக்கு எதிரான சமீபத்திய டெஸ்ட் தொடரில் 533 ஓட்டங்களைக் குவித்துள்ளார். சிறிலங்காவுக்கு எதிரான இரண்டாவது ஒருநாள் போட்டியில் சதம் அடித்ததுடன் அற்புதமாகவும் விளையாடி வருகின்றார்.

2000ஆம் ஆண்டில் சிறிலங்காவில் நடைபெற்ற டெஸ்ட் தொடரில் 688ஓட்டங்களை குவித்துள்ளார். அதே தொடரில் அற்புதமாகப் பந்துவீசி 24 விக்கெட்டுக்களை வீழ்த்தினார் முரளிதரன். அத்துடன் கடந்த ஏப்ரல் மாதம் நியூசிலாந்துடன் நிறைவுபெற்ற டெஸ்ட் தொடரிலும் முரளி பெரும் பங்காற்றினார்.

இதுவரை 80 டெஸ்ட் போட்டிகளில் விளையாடிய முரளி 450 விக்கெட்டுக்களை வீழ்த்தி மூன்றாவது இடத்தில் உள்ளார்.

ஆகவே லாறா, முரளியின் பங்களிப்பு முக்கியத்துவம்



வாய்ந்ததாகவுள்ளது.

இந்த நிலையில் இவ்விரு தலைவர்களும் எவ்வாறு அணியை வழிநடத்திச் செல்லப் போகின்றார்கள் என்பதே அனைவரினதும் எதிர்பார்ப்பாகும்.

☒☒☒

# மூலிகைகளை வளர்த்தல், பராமரித்தல்; மாணவரிடையே விழிப்புணர்வு நடவடிக்கை

(அலுவலக செய்தியாளர்)

**உலக வங்கி திட்ட அமுலாக்கல் மூலம் மூலிகைகளை வளர்த்தல் மற்றும் பராமரிப்பு தொடர்பாக பாடசாலை மாணவர்கள் மத்தியில் விழிப்புணர்வை உண்டு பண்ணும் வகையில் சுதேசிய வைத்திய அமைச்சினால் கருத்திட்ட கருத்தரங்குகள் நடைபெற்று வருகின்றன.**

நேற்று முன்தினம் காலை 10.00 மணிக்கு கிளிநொச்சி வலயக் கல்விப் பணிமனை மண்டபத்தில் கிளி. வலயக் கல்விப் பணிப்பாளர் ப. அரியரத்தினம் தலைமையில் மேற்படி கருத்தரங்கு நடைபெற்றது.

கிளி. முல்லை/துணுக்காய் பாடசாலைகளைச் சேர்ந்த சமூகக்கல்வி ஆசிரியர்கள் கலந்து கொண்ட இக் கருத்தரங்கில் எமது மண்ணில் உள்ள மூலிகைகளை அழியவிடாது பாதுகாத்து, அதனை வளர்தெடுப்பதும், இலகுவாக மூலிகைகளைக் கொண்டு நோய்களிலிருந்து மக்களை காப்பாற்றுவது தொடர்பாகவும் பாடசாலை மாணவர்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் இக்கருத்தரங்கு இடம் பெற்றது.

மேற்படி கருத்தரங்கில் தேசிய வைத்திய அமைச்சின் பணிப்பாளர் சிறில் பல்லேகெதர, திட்டப் பணிப்பாளர் இ.எஸ். மகேந்திரராஜ், மகரகம சரத் ஜெயவர்த்தன, டாக்டர் அபேவர்த்தன, தாவரவியல் நிபுணர் பியால் மாரசிங்க, ஆயுர்வேத திணைக்களத்தைச் சார்ந்த டாக்டர் எம்.ஏ. அமீன், டாக்டர் எம்.ஜ.எம். பௌமி ஆகியோர் கலந்து கருத்துரைகளை வழங்கினர். மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர் கே. எம். அகமட்டாவின் மொழிபெயர்த்தலில் இக்கருத்தரங்கு இடம்பெற்றது.

மூலிகைகள் தொடர்பாக சிங்கள மொழியில் அச்சிடப்பட்ட நூலினை தமிழ் மொழியில் முதன் முதலாக மொழியாக்கம் செய்யப் பெற்று இக்கருத்தரங்கில் விநியோகிக்கப்பட்டது. (சோ)



கிளி. வலய கல்விப் பணிமனை மண்டபத்தில் நடந்த மூலிகை வளர்ப்பு பராமரித்தல் குறித்த கருத்தரங்கில் பங்கு கொண்டோர்.

## பெற்றுக் கொள்க!

அதே இடத்தில் சேவையில் அடையாள அட்டைக்கு விண்ணப்பித்தவர்களில் ஒரு தொகையினரின் அடையாள அட்டைகள் வந்து சேர்ந்துள்ளதால் மேற்படி அடையாள அட்டைகளைத் தாமதியாமல் வந்து பெற்றுக் கொள்ளுமாறு உடையார்கட்டு தெற்கு கிராம அலுவலர் கேட்டுக் கொள்கின்றார். (19)

# நகரில் துர்நாற்றம் வீசுவதால் மக்கள் பெரும் அசௌகரியம்!

(புதுக்குடியிருப்பு)

புதுக்குடியிருப்பு நகரப் பகுதியில் அமைந்துள்ள இரணைப்பாலை வீதியில் உள்ள வாய்க்காலில் கழிவு நீர் தேங்கி நிற்பதால் அவ் வீதியால் பயணம் செய்யும் மக்கள் அதிலிருந்து வீசும் துர்நாற்றத்தால் பெரும் அசௌகரியங்களுக்குள்ளாகின்றனர்.

இவ்விடயத்தில் சம்பந்தப்பட்டவர்கள் கூடிய கவனம் எடுத்து இவ் அழுக்கு நீர் தேங்கி நிற்கா வண்ணம் நடவடிக்கை எடுக்குமாறு மக்கள் கோருகின்றனர். இவ்வாய்க்காலுக்கு அருகில் பாடசாலை உள்ளது குறிப்பிடத்தக்கது. (26)

# போதைப்பொருள் தவிர்ப்பு வாரம் வவுனியாவில் அனுஷ்டிக்க ஏற்பாடு

(வவுனியா செய்தியாளர்)

போதைப்பொருள் தவிர்ப்பு வாரம் வவுனியா மாவட்டப் பாடசாலைகளில் அனுஷ்டிக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

நாளை 23 ஆம் திகதி தொடக்கம் 29 ஆம் திகதி வரையான காலப்பகுதியே போதைப்பொருள் தவிர்ப்பு வாரமாகப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது. இக்காலப்பகுதியில் பாடசாலைகளில் பல்வேறு நிகழ்ச்சித் திட்டங்களை மேற்கொள்ள நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

நாளை "போதைப்பொருள் தவிர்ப்பின் முக்கியத்துவமும், அதிலிருந்து மீட்சி பெறுவதனால் கிடைக்கும் சிறந்த பலாபலன்களும்" என்ற தொனிப்பொருளில் நிகழ்ச்சிகளும், 24 ஆம் திகதி "மதுவற்ற மாணவ பரம்பரை" என்ற தொனிப் பொருளில் ஊர்வலம், சித்திரம் வரைதல், வீதிநாடகம் ஆகிய நிகழ்ச்சிகளும், 25 ஆம் திகதி "ஆசிரியர் மாணவர்களுக்கு, முன் மாதிரியாக இருக்கும் விதம்" என்ற தொனிப்பொருளில் கலந்துரையாடல் நிகழ்ச்சியும், 26 ஆம் திகதி "போதைப்பொருள் தவிர்ப்பு சம்பந்தமாகப் பெற்றவர்களின் பொறுப்புக்கள்" என்ற தலைப்பில் நிகழ்ச்சிகளும், 27 ஆம் திகதி "போதைப் பொருள் தவிர்ப்புச் சம்பந்தமாகப் பழைய மாணவர்களினதும் சமூகத்தினதும் பொறுப்புக்கள்" என்ற தொனிப் பொருளிலும் நிகழ்ச்சிகள் நடாத்த ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. (10)

# அக்கராயன் போதனாசிரியர் பிரிவில் கோப்பி, அன்னாசி செய்கை அறிமுகம்!

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்டத்தில் அக்கராயன் குளம் விவசாயப் போதனாசிரியர் பிரிவில் கோப்பி, திராட்சை, வெற்றிலை, அன்னாசி என்பன அறிமுகப்படுத்தப்பட்டு மேற்கொள்ளப்பட்டு வருகின்றது என அக்கராயன் குளம் விவசாயப் போதனாசிரியர் க.கணேசலிங்கம் தெரிவித்துள்ளார்.

இச்செய்கையில், ஸ்கந்தபுரம்,வன்னேரிக்குளம், ஆனைவிழுந்தான் பகுதி மக்கள் அக்கறையுடன் ஈடுபட்டு வருகின்றனர்.

தென்னை, வாழை போன்ற பயிர்களின் கீழ் இச்செய்கைகள் மேற்கொள்ளப்படுவதால் நிலப் பயன்பாடும் முகாமைத்துவமும் பேணப்படுகின்றது.

இச்செய்கையில் ஈடுபடுவதற்கான பயிற்சிகள் வழங்குவதற்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

இதேவேளை, இப்பயிர்களின் உற்பத்தியை ஏனைய இடங்களுடன் ஒப்பிடும்போது எவ்வித வித்தியாசமும் அவதானிக்கப்படவில்லையெனவும் இப்பயிர்களில் எதிர்பார்க்கும் உச்ச விளைச்சலை எதிர்காலத்தில் எட்டமுடியும் என விவசாயத் திணைக்களத்தினர் நம்புவதுடன், இதனை எல்லாப் பகுதிகளிலும் விரிவுபடுத்தும் நோக்கில் செயற்பட்டு வருவதாகவும் அக்கராயன் குளம் விவசாயப் போதனாசிரியர் மேலும் தெரிவித்தார்.

# இருப்பிட விபரம் இன்மையால் புலமைப்பரிசில் திரும்பியது!

(அலுவலக செய்தியாளர்)

சிசுரவிய புலமைப் பரிசில் மூலம் தெரிவு செய்யப்பெற்ற மாணவர்கள் எழுவருக்கான கொடுப்பனவுகள் கிளி. மக்கள் வங்கிக்கு வந்து சேர்ந்து மீண்டும் கொழும்பு மத்திய வங்கிக்கு திருப்பி அனுப்பப்பட்டுள்ளதாகத் தெரியவந்துள்ளது.

மேற்படி புலமைப் பரிசிலுக்கு கிளி. மாவட்ட பாடசாலைகளிலிருந்து தெரிவான ஏழு மாணவர்களும் தற்போது இம்மாவட்டத்தில் கல்வி பயிலாது வேறு மாவட்டப் பாடசாலைகளுக்குச் சென்றுள்ளமையின் காரணத்தினால் அவர்களின் இருப்பிட சுயவிபரங்களை அறிய முடியாத நிலையின் காரண மாக மேற்படி கொடுப்பனவுகள் திருப்பி அனுப்பிவைக்கப்பட்டுள்ளதாக சம்பந்தப்பட்டவர்களுடன் தொடர்பு கொண்டபொழுது தெரியவந்துள்ளது.

கிளிநொச்சி மத்திய கல்லூரி மேற்படி பரீட்சார்த்திகளான வி.சிந்துலேகா, என்.யோகநாதன், றி.சஜீன், கிளி இந்துக்கல்லூரி பரீட்சார்த்தி கே. பரராஜசேகரன், முழங்காவில் ம.வி பரீட்சார்த்திகளான ஆர்.கம்சவதனி, கே.மகேஸவரன், கிளி. புனித திரேசா பெண்கள் கல்லூரியைச் சேர்ந்த கே. ஐஸ்ந்தா ஆகிய எழுவரினது சிசுரவிய புலமைப் பரிசில் கொடுப்பனவுகளே இவர்களின் இருப்பிட சுயவிபரங்களை அறிய முடியாத நிலையில் திருப்பி அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

ஒருவருக்கு 5000 ரூபா வீதம் தலா எழுவரினது கொடுப்பனவான ரூபா 35,000/மும் மேற்படி வங்கியினால் திருப்பி அனுப்பிவைக்கப் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. (சோ)

– ஏ–9 வீதியின் இருமருங்கிலும் –

# வாகனங்கள் தரிப்பதால் போக்குவரத்துக்கு இடையூறு!

(அலுவலக செய்தியாளர்)

முறிகண்டி ஆலயப் பகுதியை அண்டிய ஏ-9 வீதியின் இருமருங்கிலும் வாகனங்கள் தரித்து நிற்பதனால் வீதியூடாகப் போக்குவரத்தில் ஈடுபடும் வாகனங்கள் பெரும் சிரமத்தை எதிர்நோக்குகின்றன.

மேற்படி ஆலயப் பகுதியில் வாகனத் தரிப்பிடத்தில் வாகனங்கள் நிறுத்தப்படாது வீதியில் நிறுத்தப்படுவதோடு வன்னியில் இருந்து யாழ் நோக்கி மண் ஏற்றிச் செல்லும் பாரஊர்திகள் தொடரணியாக இவ்வீதியில் கிட்டத்தட்ட மாலை 4.00 மணி முதல் மறுநாள் காலை 9.00 மணி வரையும் நிறுத்தப் படுவதால் வீதிப்போக்குவரத்தில் ஈடுபடும் பாதசாரிகள் தொடக்கம் பயணிகள் பேருந்து வரையும் பெரும் சிரமத்தை எதிர்நோக்குவதோடு இப்பகுதியில் அடிக்கடி வீதி விபத்துக்களும் இடம்பெறுகின்றமை குறிப்பிடத்தக்கது. (பா)



**யாழ். பல்கலைக்கழகத்தின் வவுனியா வளாக மாணவர்களால் வவுனியா மாவட்ட விளையாட்டுக்கழகங்களுக்கிடையே நடாத்தப்பட்ட கிரிக்கெட் சுற்றுப் போட்டியில் வெற்றியீட்டிய யங்ஸ்ரார் விளையாட்டுக்கழகத் தலைவரிடம் வவுனியா வளாக முதல்வர் பேராசிரியை இராஜேஸ்வரி-மகேஸ்வரன் வெற்றிக் கிண்ணத்தை கையளிப்பதனைப் படத்தில் காணலாம்.**

படப்பிடிப்பு:- ஆ. சுபாஸ்கரன்
(வவுனியா செய்தியாளர்)

# வவுனியா - கொழும்பு இரவு தபால் புகையிரதத்தில் கொள்ளைகள் அதிகரிப்பு

(வவுனியா செய்தியாளர்)

வவுனியாவில் இருந்து கொழும்பு செல்லும் இரவு தபால் புகையிரதத்தில் கொள்ளைச் சம்பவங்கள் அதிகரித்து வருகின்றன.

அண்மைக்காலமாக வவுனியா-கொழும்பு இரவு தபால் புகையிரதத்தில் பயணம் மேற்கொள்ளும் பிரயாணிகளுடன் நட்புறவை உரையாடி கொள்ளை அடிக்கும் சம்பவங்கள் அதிகரித்து வருகின்றன. புகையிரதத்தில் அறிமுகமாகும் நண்பர்கள் போல நடிக்கும் கொள்ளையர்கள் பயணிகளுக்கு மயக்க மருந்து கலந்த உணவுப் பண்டங்களை வழங்கி அவர்களை மயக்கி விட்டுப் பயணிகளின் உடைமைகளைச் சூறையாடிச் செல்கின்றனர்.

இவ்வாறான சம்பவங்கள் அண்மைக் காலமாக அதிகரித்து வருகின்றன. கடந்த திங்கட்கிழமை இரவு தபால் புகையிரதத்தில் வெளிநாட்டில் இருந்து வந்த மூவர் வவுனியா புகையிரத நிலையத்தைப் புகையிரதம் அடைந்தும் மயக்கம் தெளியாமையால் வவுனியா பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர்.

இவ்வாறான கொள்ளையர்களின் நட்பில் இருந்து தம்மையும், தமது உடைமைகளையும் பாதுகாத்துக் கொள்ளுமாறு வவுனியா புகையிரத நிலையப் பொலிசார் பொதுமக் களைக் கேட்டுள்ளனர். (10)

# அரசாங்க ஊழியர்களின் சம்பளத்தை 50வீதத்தால் உயர்த்த சனாதிபதி சிபாரிசு

## 2-வது தடவையாக அமைச்சரவைக்கு நிர்ப்பந்தம்

**அரசாங்க ஊழியர்களின் சம்பளத்தை 50 வீதத்தால் உடனடியாக அதிகரிக்கும் படி சனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க அமைச்சரவைக்கு சிபாரிசு செய்துள்ளார்.**

இந்த யோசனை கடந்த அமைச்சரவைக் கூட்டத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளதாக சனாதிபதி செயலகம் தெரிவித்துள்ளது.

அரச ஊழியர்களின் சம்பளம் 1997/1998 ஆம் ஆண்டில் திருத்தியமைக்கப்பட்டது. திஸ்ஸ தேவேந்திர ஆணைக்குழுவின் சிபாரிசுகள் அமுல்படுத்தப்படும் வரை இரண்டாயிரம் ஆண்டு இரண்டு கொடுப்பனவுகள் வழங்கப்பட்டன.

வாழ்க்கைச் செலவு அதிகரித்துள்ளது. அரச தொழிற் சங்கங்கள் சம்பள உயர்வு ஒன்றைக் கோரி வலியுறுத்தி வருகின்றன.

திஸ்ஸ தேவேந்திர சம்பள ஆணைக்குழுவை முழுமையாக அமுல்படுத்த அரசாங்கத்திற்கு நிதி நெருக்கடி ஏற்பட்டிருந்தது.

ஆனால் டோக்கியோ மாநாட்டு நிதி ஓரளவு நெருக்கடியைக் குறைத்துள்ளது. ஆகையால் ஊழியர்களுக்கு உடனடியாக 50 சதவீத சம்பள உயர்வு வழங்கப்படவேண்டும். திஸ்ஸதேவேந்திர ஆணைக்குழுவின் அறிக்கையை இடைக்கால அறிக்கையாக வெளியிடவேண்டும்.

அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள சிபாரிசுத் திருத்தங்கள் உடனடியாக அமுல்படுத்தப்பட வேண்டும் எனவும் அவ்வறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

# -யாழ்.இல் பாடசாலை அதிபரை- கத்தியுடன் துரத்திய மாணவனின் தந்தை

பாடசாலைக்கு ஒழுங்காக வருகைதருமாறு மாணவன் ஒருவருக்கு அறிவுரை கூறிய அதிபரை மாணவனின் தகப்பனார் கத்தியுடன் துரத்தியுள்ளார்.

வலிகாமம் வலயத்தைச் சேர்ந்த சூட்டிக்குளம் அமெரிக்க மிசன் தமிழ்க்கலவன் பாடசாலையில் தரம் 11இல்கல்வி கற்கும் மாணவன் ஒழுங்காக பாடசாலைக்கு சமுகமளிக்காமை யினால் அம் மாணவனைப் பாடசாலைக்கு ஒழுங்காக வருமாறு அதிபர் கூறியதை அடுத்து, அடுத்த நாள் அம் மாணவன் இன்னுமோர் நண்பனுடன் வந்து பாடசாலையின் விடுகைப்பத்திரத்தைப் பெற்றுச்சென்றுள்ளார். மறுதினம் போதையில் வந்த அம் மாணவனின் தகப்பனார் அதிபரைக் கத்தியுடன் வெட்டுவதற்கு துரத்தியதால் அவர் இன்னுமோர் ஆசிரியருடன் தப்பிச்சென்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. (33)

# குவைத் யுத்த பாதிப்பினால் இழப்பீட்டை பெறாதோருக்கு உதவ ஐ.நா.நடவடிக்கை

(கொழும்பு)

குவைத் யுத்தத்தில் பாதிக்கப்பட்டு நட்டஈடு கிடைக்காத 2900 பேருக்கு நட்டஈடு வழங்க ஐ.நா.நட்டஈட்டு ஆணைக்குழு அனுமதியளித்துள்ளது.

அத்துடன் விண்ணப்பங்களை உரிய காலத்தில் அனுப்பி வைக்காமை, முழுமையாகாத விண்ணப்பங்களை வழங்கியமை போன்ற காரணங்களினால் குவைத் நட்ட ஈடு நிராகரிக்கப்பட்ட 4723 பேருக்கு நட்டஈடு கிடைக்க வழியமைக்கப்பட்டுள்ளதாகத் தொழில், வேலைவாய்ப்பு அமைச்சர் மகிந்த சமரசிங்க தெரிவித்துள்ளார்.

சர்வதேசத் தொழிலாளர் அமையத்தின் 91 ஆவது வருடாந்தக் கூட்டத் தொடர் ஜெனிவாவில் நடைபெற்ற போதேஐ.நா.நட்டஈட்டு ஆணைக்குழு முக்கியஸ்தர்களுடன் அமைச்சர் பேச்சுவார்த்தை நடத்திக் குவைத் நட்ட ஈடு வழங்கும் நடவடிக்கைக்கு ஆதரவு பெற்றுள்ளார்.

இதன்படி குவைத் நட்ட ஈடு பெறத் தகுதியானவர்களின் விபரங்களைத் திரட்டுமாறும் எந்தளவு பணம் வழங்க முடியும் என்பதை ஆராயுமாறும் அமைச்சர் வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்தலைவருக்குப் பணித்துள்ளார்.

அமைச்சரவை அனுமதியுடன் குவைத் நட்டஈட்டுத் தொகையை வழங்க நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் அமைச்சர் கூறினார்.

குவைத் நட்டஈடுபெறுவதற்குத் தகுதியானவர்கள் எண்ணிக்கை 15 ஆயிரம் என்று மதிப்பிடப்பட்டுள்ளதாகவும், இவர்கள் தொடர்பாக அமைச்சுக் கவனம் செலுத்தி வருவதாகவும் அமைச்சர் கூறினார்.

தற்போது 2900 பேருக்கு ஒரு மாத காலத்திற்குள் குவைத் நட்டஈட்டைப் பெற்றுக் கொடுக்க நடவடிக்கை எடுத்துள்ளதாக அமைச்சர் மகிந்த சமரசிங்க மேலும் கூறியுள்ளார்.

# 'பாத்தீனியம்' களைகளை அழிக்கும்பணி ஆரம்பம்

(கிளிநொச்சி)

அக்கராயன் குளம் பகுதியில் பாத்தீனியம் செடி அழிக்கும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

அக்கராயன் குளம் விவசாயப் போதனாசிரியர் பிரிவில் உள்ள அக்கராயன்குளம் ப.நோ.கூ.சங்க வளவிலும், அரசினர் வைத்தியசாலை வளவிலும் காணப்பட்ட பாத்தீனியம் களைகளே அழிக்கப்பட்டுள்ளன.

விவசாயப் போதனாசிரியர் க.கணேசலிங்கத்தின் நேரடி கண்காணிப்பில் இந்நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

அத்துடன் அவ்விடத்தில் வைத்தே இச்செடியின் தாக்கம் தொடர்பாக மக்களுக்கு அறிவுரைகளும் வழங்கப்பட்டன.

# அரியாலைப் பகுதியில் குடியேற வேண்டாம்

## யு.என்.டி.பி கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

யாழ். அரியாலைப் பகுதியில் மிதிவெடிகள், கண்ணி வெடிகள் அகற்றப்படாததால் மக்கள் குடியேற வேண்டாம் என யு.என்.டி.பி. நிறுவனம் எச்சரித் துள்ளது.

படையினரால் இப்பகுதியில் புதைக்கப்பட்டுள்ள பெருமளவு மிதிவெடிகள், கண்ணிவெடிகள் முழுமையாக அகற்றப்படாததால், அப்பகுதியில் மக்கள் மீளக் குடியேறும் போது பெரும் உயிரிழப்புக்களையும் அவயவ இழப்புக்களையும் எதிர்கொள்ள நேரிடும். எனவே இப்பகுதியில் மக்கள் மீளக்குடியேறச் செல்ல வேண்டாம் என அந்நிறுவனம் எச்சரித்துள்ளது. (33)

# தேசியமட்ட கட்டுரைப் போட்டியில் இரண்டாமிடம்



(அலுவலக செய்தியாளர்)

இந்து கலைகலாச்சார அமைச்சினால் அண்மையில் 2003 உலக இந்து மாநாட்டுக்காக நடத்தப்பட்ட கட்டுரைப் போட்டியில் கிளிநொச்சி இந்துக்கல்லூரி மாணவன் ச.சுஜிந்தன் இரண்டாமிடத்தைப் பெற்று வெள்ளிப் பதக்கத்தினைப் பெற்றுக்கொண்டார்.

கட்டுரைப் போட்டியில் மத்திய பிரிவில் தோற்றி தேசிய ரீதியில் இவர் இரண்டாம் இடத்தினைப் பெற்றுள்ளார். (சோ)

# அன்ரனோவ் செயலிழந்தது

அண்மையில் பலாலியில் தரையிறங்கும் போதுவிபத்துக்குள்ளான அன்ரனோவ் விமானத்தை மீண்டும் பயன்படுத்த முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.இதன் போது விமானத்தின் இயந்திரங்கள் செயற்படாது போனதுடன் இயந்திரம் ஒன்று தீப்பற்றிக்கொண்டதும் குறிப்பிடத்தக்கது.

## கபடிப்போட்டி

# சிவநகர் அ.த.க. பாடசாலை தேசிய மட்டத்திற்குத் தெரிவு

(வவுனியா)

பாடசாலைகளுக்கிடையிலான கபடிப் போட்டியில் கிளிநொச்சி சிவநகர் அ.த.க. பாடசாலை தேசிய மட்டப்போட்டிக்குத் தெரிவாகியுள்ளது.

வவுனியா நகரசபை மைதானத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற மாகாண மட்டப் போட்டியில் முதலாம் இடத்தை சிவநகர் அ.த.க. பாடசாலை மாணவிகளும், இரண்டாம் இடத்தை மட்டக்களப்பு களுதாவளை பெண்கள் கல்லூரியும், மூன்றாம் இடத்தை வவுனியா றம்பைக்குளம் மகளிர் கல்லூரியும் பெற்றுக் கொண்டன. (28)

# புனரமைப்பு கலந்துரையாடல்

(அலுவலக செய்தியாளர்)

துணுக்காய், பாண்டியன்குளம் பிரதேசங்களில் 2003 ஆம் ஆண்டிற்கான நியாப்மூலம் குளங்கள் புனரமைப்பு வேலைத்திட்டங்கள் தொடர்பாக கலந்துரையாடல் ஒன்று நடைபெற்றுள்ளது.

மேற்படி குளங்களின் புனரமைப்புப் பணிகள் நியாப் வேலைத் திட்டங்களின் கீழ் தெரிவு செய்யப் பட்டு ஆரம்பிப்பது தொடர்பாகவும், செய்யப்படும் வேலைகள் தொடர்பாக பாண்டியன்குளம், துணுக்காய் கமக்கார அமைப்புக்களுடனான கலந்துரையாடல் ஒன்று கடந்த 14 ஆம் திகதி பாண்டியன்குளம் தமிழீழ பொருண்மியமேம் பாட்டு நிறுவன இணைப்பாளர் அமலன் தலைமையில் நடைபெற்றது. (பா)

# கட்டுத்துவக்கு வெடித்து காயம்

(அலுவலக செய்தியாளர்)

செட்டிக்குளம் பகுதியில் கட்டுத்துவக்கு, வெடித்ததில் ஒருவர் காயமடைந்து வவுனியா வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

மேற்படி சம்பவம் செட்டிக்குளம் இலுப்பைக்குளம் பகுதியில் கடந்தவியாழனன்று பகல் 1.30 மணியளவில் இடம் பெற்றுள்ளது. இச்சம்பவத்தில் இலுப்பைக் குளத்தைச் சேர்ந்த மாணிக்கம் ரவி என்பவரே காயமடைந்து செட்டிக்குளம் மாவட்ட வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக வவுனியா பொதுவைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (பா)




புதூர் நாகதம்பிரான் பொங்கல் திருநாள்

சிறப்புப் பேருந்துப் பணி

தமிழீழப் போக்குவரவுக் கழகம்



23.06.2003 ஆம் நாள் திங்கட்கிழமை புதூர் நாகதம்பிரான் கோவிலில் நடைபெறும் பொங்கல் திருநாளை முன்னிட்டு பின்வரும் வழித்தடங்களில் சிறப்புப் பேருந்துப்பணி நடைபெறும்.

புதுக்குடியிருப்பு பேருந்து நிலையம், முள்ளியவளை நகர், முல்லைத்தீவு நகர், நெடுங்கேணி நகர், மல்லாவி பேருந்து நிலையம், கிளிநொச்சி பேருந்து நிலையம், முழங்காவில் பேருந்து நிலையம், புளியங்குளம் பேருந்து நிலையம், பளைப் பேருந்து நிலையம் ஆகிய இடங்களிலிருந்து புறப்பட்டு புதூர் நாகதம்பிரான் கோவிலைச் சென்றடையும் என்பதனை பொதுமக்களுக்கு மகிழ்ச்சியுடன் அறியத்தருகிறோம்.

குறிப்பு:- புதுக்குடியிருப்பில் இருந்து விசுவமடு, பரந்தன் வழித்தடத்தின் ஊடாகவும், புதுக்குடியிருப்பு கற்சிலைமடு, ஒட்டுசுட்டான்,மாங்குளம் வழித்தடத்தின் ஊடாகவும் பணி நடைபெறும்.

முகாமையாளர்,
தமிழீழப் போக்குவரவுக் கழகம்,
பேருந்துப்பகுதி,
கிளிநொச்சி.

(சி.-8176)

## சிந்தனைக்கு

சத்தியத்திற்காகச் சாகத் துணிந்து விட்டால், ஒரு சாதாரண மனிதப் பிறவியும் சரித்திரத்தைப் படைக்க முடியும்.

**தமிழீழத் தேசியத்தலைவர்**



ஈழநாதம்
EELANATHAM மக்கள் நாளிதழ்
யாழ். சாலை, கிளிநொச்சி. 22-06-2003

## "சமாதி கட்டி விடுவார்கள்"

விடுதலைப்புலிகளுக்கும் சிறிலங்கா அரசாங்கத்திற்கும் இடையிலான சமாதானப் பேச்சுவார்த்தைகள் ஓர் ஸ்தம்பித நிலை அடைந்துள்ள அதேவேளை, பேச்சுவார்த்தைகளை மீளவும் ஆரம்பிப்பதற்கான முழு அளவிலான முயற்சியில் அரசாங்கம் ஈடுபடும் என பிரதமர் ரணில் விக்கிரமசிங்க நாட்டு மக்களுக்குச் சில தினங்களின் முன் ஆற்றிய தொலைக்காட்சி உரையில் உறுதி கூறினார்.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க சமாதானப் பேச்சுவார்த்தைகளை ஆரம்பிப்பதற்கென முன்வைத்துள்ள இடைக்கால நிர்வாகம் குறித்த யோசனைகள் விடுதலைப்புலிகளால் நிராகரிக்கப்பட்டுள்ளதாயினும், இவ்விடயத்தில் முன்னேற்றம் காண்பதற்குச் சிறிது தாமதமாவது அமைதிச் சூழ்நிலையையோ அன்றி யுத்த நிறுத்தத்தையோ பாதிப்பதாக அமையமாட்டாது. ஆனால், வடக்கு-கிழக்கில் குறிப்பாக யாழ்.குடாநாட்டில் அதிகரித்து வரும் இராணுவக் கெடுபிடிகள் அமைதிச் சூழ்நிலைக்கு விரைவிலேயே குந்தகம் விளைவிக்கத்தக்கதாகும்.

யாழ்.குடாநாட்டில் கடந்த ஒரு வாரத்திற்குள் சிறிலங்கா இராணுவத்தினரின் செயற்பாடுகள் தீவிரம் பெற்றுள்ளன. வீதிச் சோதனைகள் அதிகரிக்கப்பட்டுள்ளன. சுற்றிவளைப்புக்கள், தேடுதல்கள் தீவிரம் பெற்றுள்ளன. புதிய முகாங்களும், சோதனைச் சாவடிகளும் அமைக்கப்பட்டு வருகின்றன. பெரிய அளவிலான கைது நடவடிக்கைகள் மட்டுமே இதுவரையில் இடம்பெற்றதாக இல்லை.

விடுதலைப்புலிகளுக்கும் சிறிலங்கா அரசாங்கத்தின் யுத்தநிறுத்த உடன்பாட்டின் முக்கிய நோக்கமே மக்கள் மத்தியில் இயல்பு வாழ்க்கையைத் தோற்றுவிப்பதற்கானதே ஆகும். ஆனால், இராணுவத்தினரின் தற்போதைய நடவடிக்கைகள் இந்நோக்கத்திற்கு மாறானவையாகும். இவை யுத்தநிறுத்த மீறல்கள் என்ற வகையில் உள்ளடங்காது போயினும்கூட யுத்தநிறுத்த உடன்பாட்டின் நோக்கத்தைச் சீர்குலைப்பதாகவே இருக்க முடியும்.

இது ஒரு புறம் இருக்க விடுதலைப்புலிகளுக்கும்-சிறிலங்கா இராணுவத்திற்கும் இடையிலான சமாதானப் பேச்சுவார்த்தைகளின் இடையே முட்டுக்கட்டைகள் ஏற்பட்டமைக்கு யாழ்.குடாநாட்டில் உயர் பாதுகாப்பு வலயம் எனக் கூறிக்கொண்டு இராணுவம் ஆக்கிரமித்துள்ள பிரதேசங்கள் தொடர்பான பிரச்சினையே முக்கிய காரணம் ஆகும். பேச்சுவார்த்தைகளில் எதிர்பார்த்த முன்னேற்றம் காணப்படாமைக்கும் இதுவே காரணம் என்பது நிராகரிக்கப்பட முடியாத தொன்றே.

ஆனால், இவற்றை எல்லாம் இராணுவம் புறந்தள்ளிவிட்டு, தற்பொழுது மீண்டும் தனது நடவடிக்கையைத் தொடங்கியுள்ளது. இது இனப்பிரச்சினைத் தீர்விற்கான சமாதான முயற்சி களில் அரசாங்கம் காட்டும் தீவிரம், அக்கறை என்பவற்றை விட வேகமானதாகவும், துரிதமானதாகவும் இடம்பெற்று வருகின்றது என்பதே யதார்த்தமானதாய் உள்ளது.

இந்நிலையில் அரசாங்கம் யுத்தத்தை நோக்கி விரைகின்றதா? அன்றிச் சமாதானத்தை நோக்கி விரைகின்றதா? என்பது முக்கியமானதொரு கேள்வியாக எழுகின்றது. இதில், அரசாங்கம் சமாதான முயற்சிகளிலேயே அதிக அக்கறையும், ஈடுபாடும் கொண்டதாக இருப்பின், யுத்தத்திற்கான முன்னெடுப்புக்களில் வெளிக்காட்டும் அக்கறையை விட சமாதான முயற்சிகளில் காட்டும் அக்கறையானது தீவிரமானதாக இருத்தல் வேண்டும்.

இவ்வாறு இல்லாதுவிடில், அரசாங்கம் யுத்தத்தில் அக்கறை காட்டுவதாகவே அர்த்தம் கொள்ள முடியும். இதற்கு வலுச் சேர்ப்பதற்கான அரசாங்கத்தரப்பு அறிவிப்புக்களும் இல்லாமல் இல்லை. எடுத்துக் காட்டாகப் பொருளாதார மறுசீரமைப்பு மீள் கட்டமைப்பு அமைச்சர் மிலிந்த மொறகொடவின் "மீண்டும் ஒரு போருக்கு நாம் தயாராகவே உள்ளோம். நாட்டில் போர் ஏற்பட்டால் அமெரிக்காவும், இந்தியாவும் படைத்துறை ரீதியாக எமக்கு உதவி வழங்கத் தயாராகவுள்ளன" என்ற கூற்றுக்களைச் சுட்டிக் காட்ட முடியும்.

இவ்வாறு அரசாங்கத் தரப்பிற்கு யுத்தத்தை ஆரம்பிக்கும் நோக்கம் இல்லாது விடினும் கூட, யுத்தத்திற்கு ஆதரவான சக்திகள் பலமாகவும், அதிகாரத்திலும் உள்ளன என்பதை எவருமே நிராகரித்து விட முடியாது. இதில் தற்பொழுது அக்கறை செலுத் தாது விட்டுவிட்டு பின்னர் அதற்கும் எமக்கும் தொடர்பில்லை, எமக்குத் தெரியாமல் நடந்து விட்டது. நடந்து முடிந்த பின்னரே தகவல்கள் எமக்குத் தரப்பட்டவை எனக் கூறுதல் அர்த்தமற்றதும், பொறுப்புமற்றதுமான தொன்றாகவே இருக்கும்.

ஆகையினால், சமாதான முயற்சிகள் மந்தகதி அடைந்துள்ள இன்றைய நிலையில், சமாதானத்திற்கும் யுத்தநிறுத்த உடன்பாட்டிற்கும் மாறான செயற்பாடுகளுக்கு ஊக்கம் அளிப்பதையோ அன்றி அத்தகைய செயற்பாடுகளுக்கு இடமளிப்பதையோ தவிர்த்தல் வேண்டும். அவ்வாறு இல்லாது விடில் அரசாங்கம் விரும்பியதோ இல்லையோ யுத்தநிறுத்தத்திற்கும், சமாதானத்திற்கும் சமாதானத்தின் விரோதிகள் சமாதி கட்டி விடுவார்கள்.

# அமெரிக்க நாசகாரி போர்க்கப்பல் கொழும்பு துறைமுகத்தில் தரிப்பு!

(கொழும்பு)

அமெரிக்க ஏவுகணை நாசகாரி கப்பல்களில் ஒன்றான 'ஒகேன்' சிறிலங்காத் தலைநகர் கொழும்பை வந்தடைந்துள்ளது. இதன் வருகையை கொழும்பிலுள்ள அமெரிக்கத் தூதரகம் நேற்று முன்தினம் அறிவித்தது.

மேற்படி கப்பலில் சுமார் 350 வீரர்கள் உள்ளனர். கடலில் விரைவானதும், தொடர்ச்சியானதுமான தாக்குதல்களை மேற்கொள்ளத் தயாராகுவதே இதன் வருகையின் நோக்கம் எனக் கூறப்பட்டுள்ளது.

1999 ல் சேவைக்கு விடப்பட்ட இக் கப்பல் ஹவாய் பேர்ள் துறைமுகத்தைத் தளமாகக் கொண்டிருக்கிறது. இரண்டாம் உலகப் போரில் புகழ்பெற்ற ரியர் அட்மிரல் ரிச்சார்ட் எச்.ஒகேனின் பெயரே இதற்குச் சூட்டப்பட்டுள்ளது.



கொழும்பில் தரித்து நிற்கையில் கப்பலின் கட்டளைத் தளபதியான மைக்கல் எஸ் வில்லண்ட் சிறிலங்கா கடற்படை தளபதி மற்றும் அதிகாரிகளைச் சந்திக்கவுள்ளார். வீரர்களும் கொழும்பைச் சுற்றிப் பார்வையிடுவர் என அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

இக்கப்பலின் விஜயம் வழமையானதொன்றென அமெரிக்கத் துதரகம் மேலும் குறிப்பிட்டுள்ளது.

இதேவேளை, மேற்படி கப்பலின் தரிப்பிடத் தளமான ஹவாய் தீவிலுள்ள அமெரிக்காவின் பசுபிக் பிராந்தியக் கடற்படைத் தளத்திற்கு அண்மையில் சிறிலங்காக் கடற்படைத் தளபதி தயாசந்தகிரியும் மற்றும் அமெரிக்காவுக்கான இலங்கைத் தூதுவர் தேவிந்த சுபசிங்கவும் நேரில் சென்றிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## ரத்வத்தவுக்கு அனுமதி

இன்று நடைபெறும் சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் 14வது தேசிய சம்மேளனக் கூட்டத்தில் பங்குபற்றுவதற்கு முன்னாள் பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் அனுருத்த ரத்வத்தவுக்கு சிறைக்கூட அதிகாரிகள் அனுமதியளித்துள்ளனர்.

ரத்வத்த கடந்த தேர்தலின் போது நடைபெற்ற கொலைச் சம்பவத்தில் சந்தேக நபராக சிறையில் அடைக்கப்பட்டு விசாரிக்கப்படுவது தெரிந்ததே.

இவருக்கு மேற்படி அனுமதி வழங்கக் கோரி சனாதிபதியின் சட்டத்தரணி ஒபேசேகர நீதிமன்றில் அனுமதி கோரியிருந்தார். இதற்கு அனுமதிக்கும் வகையில் இன்று காலை 10 மணி முதல் ஐந்து மணிவரை கூட்டத்தில் பங்கு கொள்ள ரத்வத்தவுக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

## வறுமை குறைப்பு நடவடிக்கைக்கு உலக வங்கி ரூபா12,50 கோடி உதவி

இலங்கையின் வறுமை குறைப்பு நடவடிக்கைகளுக்கு உலக வங்கி 12.50 கோடி ரூபாய்களை (125 மில்லியன் டொலர்கள்) கடனாக வழங்கியிருக்கின்றது.

இலங்கையை மீளக் கட்டியெழுப்புவது எனும் திட்டத்தின் கீழ் வறுமைக்குறைப்புத் தொடர்பாக முன் வைக்கப்பட்டுள்ள திட்டத்தின் கீழ்இந்தக் கடன் தொகை வழங்கப்பட்டிருக்கின்றது எதிர்வரும் 3-4 வருட காலப்பகுதிக்குள் இந் நாட்டின் வறுமையைக் குறைப்பதற்கென்று திட்டப்பட்ட திட்டத்தின் அடிப்படையில் பொருளாதார மேம்பாட்டை கருவாகக் கொண்டு இந்தக்கடன் உதவி வழங்கப்பட்டிருப்பதாக உலக வங்கி அறிவித்துள்ளது. இதன் மூலம் உள்நாட்டில் மொத்தத் தேசிய உற்பத்தியை ஏழுசதவீதமாக உயர்த்தச் செய்வதும், வறுமை நிலையை 25 சதவீதத்தில் இருந்து 20 சதவீதம் வரை குறைப்பதும், கிராமிய வறுமையை 22 சதவீதமாகக் குறைப்பதும் இதன் குறிக்கோளாகும். எதிர் வரும் மூன்று வருட காலப்பகுதிக்குள் இவை எட்ட வேண்டிய இலக்காகக் கொள்ளப்படுகின்றன.

## தேசிக் கன்றுகள் வழங்கல்

உலக சூழல் தினத்தை முன்னிட்டு த.பொ.மே நிறுவனத்தின் விசுவமடுப் பிரதேச இணைப்பாளர் சு.சிறிதரால் ஊரக வளர்ச்சித் திட்டத்தினூடாக விசுவமடு பாரதிபுரக் கிராமத்தில் 50 குடும்பங்களைத் தெரிவு செய்து ஒவ்வொரு குடும்பத்திற்கும் பத்துத் தேசிக்கன்றுகள் வீதம் வழங்கப்பட்டன. (19)

# அரசியலில் விளையாட்டை கலக்கக் கூடாது; போட்டிகளை நடத்த முன்வாருங்கள்

## -ஐ.சி.சி.யின் முன்னாள் தலைவர் அழைப்பு

பாகிஸ்தானுடன் இந்தியா மீண்டும் கிரிக்கெட் போட்டிகளில் பங்கேற்க வேண்டுமென்று சர்வதேச கிரிக்கெட் சபையின் முன்னாள் தலைவர் மார்க்கட் கிரேட் தெரிவித்துள்ளார்.

கார்க்கில் போருக்குப் பின்னர் இந்தியா-பாகிஸ்தானுக்கிடையேயான உறவு சீர்குலைந்தமையை அடுத்து, இரு நாடுகளுக்கிடையேயான கிரிக்கெட் போட்டிகளும் தடைப்பட்டன.

உலகக் கோப்பைப் போட்டி போன்ற முக்கிய போட்டிகளைத் தவிர, பிற போட்டிகளில் பாகிஸ்தானுடன் பங்கேற்க இந்திய கிரிக்கெட் அணிக்கு மத்திய அரசு தடை விதித்திருந்தது.

இந்நிலையில் சர்வதேச கிரிக்கெட் சபையின் தலைவர் பதவியிலிருந்து ஓய்வு பெற்றுள்ள மார்க்கட் கிரேட் செய்தியாளர்களிடம் பேசுகையில்;

இரு நாட்டு அணிகளும் மீண்டும் கிரிக்கெட் போட்டிகளில் விளையாட வேண்டுமென்று கேட்டுக்கொண்டுள்ளார்.

அரசியல் பிரச்சினைகளால் கிரிக்கெட் போட்டிகள் தடைப்படுவது ஆரோக்கியமானதல்ல. இரு நாட்டு அணிகளும் ஒரு மைதானத்தில் போட்டிகளில் பங்கேற்க வேண்டும் என்று கூறியுள்ளார்.

அரசியலில் விளையாட்டைக் கலக்கக்கூடாது என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

## முன்னணி டென்னிஸ் வீரர் ரூ.7½கோடி இழப்பீடு கோரல்

அவுஸ்திரேலிய முன்னணி டென்னிஸ் வீரரான லெய்ட்டன் ஹெவிட், சர்வதேச டென்னிஸ் சங்கம் மீது ஏழரைக் கோடி ரூபாய் நட்டஈடு கோரி வழக்குத் தொடர்ந்துள்ளார்.

கடந்த ஆண்டு விம்பிள்டன் போட்டி நடந்த போது, தொலைக்காட்சி ஒன்றில் லெய்ட்டன் ஹெவிட் பேட்டியளிக்கச் சர்வதேச டென்னிஸ் சங்க அமைப்பு ஏற்பாடு செய்திருந்தது.

ஆனால் இந்தப் பேட்டிக்கு ஹெவிட் மறுத்து விட்டதையடுத்து, அவருக்கு அபராதம் விதிக்கப்பட்டது.

இதனைக் கடுமையாகக் கண்டித்த ஹெவிட், தன்னை அவமதித்த சர்வதேச டென்னிஸ் சங்கம் மீது ஏழரைக் கோடி ரூபாய் நட்ட ஈடு கோரி வழக்குத் தொடர்ந்துள்ளார்.




## 2-வது ஒரு நாள் போட்டியில் 7 விக். இங்கிலாந்து வென்றது

### -முக்கிய போட்டி இன்று நடைபெறும்

லண்டன் ஓவல் மைதானத்தில் நடைபெற்ற பாகிஸ்தான் அணிக்கு எதிரான இரண்டாவது ஒரு நாள் சர்வதேச கிரிக்கெட் போட்டியில் இங்கிலாந்து அணி ஏழு விக்கெட்டுக்களால் வெற்றிபெற்றது.

முதலில் துடுப்பெடுத்தாடிய பாகிஸ்தான் அணி 44 ஓவர்களில் அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து 185 ஓட்டங்களைப் பெற்றது.

யூசுப் யுகானா ஆட்டம் இழக்காது 75 ஓட்டங்களைப் பெற்றார். இங்கிலாந்தின் வேகப்பந்து வீச்சாளர் அண்டர்சன் ஹட்ரிக் சாதனை நிகழ்த்தியதுடன் பாகிஸ்தானின் ஓட்ட வேகத்தையும் கட்டுப்படுத்தினார்.

இங்கிலாந்து அணி 23 ஓவர்களில் மூன்று விக்கெட்டுக்களை இழந்து வெற்றி இலக்கை எட்டியது.

மூன்றாவது ஒரு நாள் போட்டி இன்று லோர்ட்ஸ் மைதானத்தில் நடைபெறவுள்ளது.

மூன்று போட்டி கொண்ட தொடரில் இரு அணிகளும் தலா ஒவ்வொரு வெற்றியைப் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## முதல் நாளில் 4 விக்-250 ஓட்டங்கள்

மேற்கிந்திய தீவு சிறிலங்கா அணிகளுக்கிடையில் சென்லூசியாவில் ஆரம்பமாகியுள்ள டெஸ்ட் போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடும் சிறிலங்கா அணி முதல் நாள் ஆட்டநேர முடிவின் போது 4 விக்கெட்டுக்களை இழந்து 250 ஓட்டங்களைப் பெற்றுள்ளது.

இதில் மாவன் அத்தபத்து ஆட்டம் இழக்காது 108 ஓட்டங்களைப் பெற்றுள்ளார்.

# யாழ். பல்கலைக்கழக மாணவர் விடுத்த பொங்கு தமிழ் 2003க்கான அழைப்பு!

(யாழ்ப்பாணம்)

"எமது நிலம் எமக்கு வேண்டும். எமது நிலமே எமக்கு வேண்டும்", "நாங்கள் எங்கள் வீடுகளுக்கு போக வேண்டும். நீங்கள் உங்கள் வீடுகளுக்குப் போங்கள்" என்ற கோஷத்துடன் பொங்கு தமிழ் - 2003 விழாவுக்கான அழைப்பு யாழ். பல்கலைக்கழக சமூகத்தால் விடுக்கப்பட்டுள்ளது.

யாழ். பல்கலைக்கழக மைதானத்தில் எதிர்வரும் 27ஆம் திகதி பிற்பகல் 3.00 மணிக்கு இந்த மாபெரும் நிகழ்வு இடம்பெறவுள்ளது.

சண்டை இல்லாமல் இரத்தமும் சிந்தாமல், உடைமைகளும் உயிர்களும் அநியாய இழப்பின்றி, இடம்பெயர்வின்றி, அவல வாழ்வின்றி, தமிழர் உரிமையை வென்றெடுக்க ஒரு சந்தர்ப்பம்.

தமிழ் மக்களின் உண்மையான விருப்பத்தை அறிய சர்வதேச சமூகத்தினர் முயற்சிக்கின்றார்கள். தமிழ் மக்கள் ஒன்றுகூடி எம் விருப்பத்தை வெளிப்படுத்துவோம்.

தமிழ் மக்கள் எழுச்சி கொள்வோம். பொங்கு தமிழில் சங்கமிப்போம். புதிய சரித்திரம் படைப்போம் உலகம் வியக்கும்.

இது ஒரு இறுதிச் சந்தர்ப்பம். புரிந்துணர்வு ஒப்பந்தத்தால் தமிழ் மக்களின் வாழ்வில் இயல்பு நிலை தோற்றுவிக்கப்படாமல் வாக்குறுதிகள் இழுத்தடிக்கப்பட்டு, பேச்சுக்கள் தடைப்பட்டு ஆக்கிரமிப்பு யுத்த மேகம் சூழும் இந்நேரத்தில் இதுவே இறுதிச் சந்தர்ப்பம்.

தமிழ் மக்கள் அலை அலையாக அணிதிரள்வோமாயின், விடுதலை உணர்ச்சி வெள்ளத்தில் கலந்து குரல் எழுப்புவோமாயின் நிச்சயம் பலன் கிடைக்கும் என அவ்வழைப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, பொங்கு தமிழ் நிகழ்வு நடைபெறும் பல்கலைக்கழக வளாகம் சிவப்பு, மஞ்சள் கொடிகளால் அலங்கரிக்கப்பட்டு தற்போதே எழுச்சிக் கோலம் பூண ஆரம்பித்துள்ளது.

அத்துடன் கிராமம் கிராமமாகவும், வீடுவீடாகவும் சென்று பொங்கு தமிழ் நிகழ்வுக்கான அழைப்புக்குரிய எற்பாட்டினை யாழ். பல்கலைக்கழக சமூகம் மேற்கொண்டு வருகின்றது. (33)

# சட்டவிரோதமாக இத்தாலி சென்றோரின் படகு கடலில் மூழ்கி 200பேர் பலி!

## 41பேர் மீட்கப்பட்டனர்

சட்டவிரோதமாக இத்தாலிக்கு செல்ல முயன்றவர்கள் பயணம் செய்த படகு கடலில் மூழ்கியதில் இருநூறுபேர் பலியாகி இருக்கக்கூடும் என அஞ்சப்படுகின்றது.

இருநூற்று ஐம்பது பேருடன் இத்தாலி நோக்கிச் சென்று கொண்டிருந்த படகு இடையில் கடலில் மூழ்கியுள்ளது.

சம்பவம் நடந்த இடத்திற்குச் சென்ற கடற்படையினர் 41 பேரைக் காப்பாற்றிஉள்ளனர்.

இதுவரை இருபது பேரின் சடலங்கள் மீட்கப்பட்டுள்ளன.

இவ்விபத்திற்கான காரணம் இன்னும் தெரியவரவில்லை.

இக்கப்பல் இந்தியாவிலிருந்து புறப்பட்டதாக உயிர்தப்பியோர் தெரிவித்துள்ளனர்.

# கலை பண்பாட்டுக் கழகத்தின் 'வெளிச்சம்' வெளிவந்துள்ளது

விடுதலைப்புலிகள் கலை பண்பாட்டுக்கழகத்தின் வெளியீடான வெளிச்சம் சஞ்சிகையின் எண்பத்திரண்டாவது இதழ் வெளிவந்துள்ளது. இந்த இதழில் தமிழீழத் தேசியத் தலைவரின் கருத்துரையுடன் மாலிகா, அலையிசை, புதுவை இரத்தினதுரை, கபின், பத்தனையூர் வே. தினகரன், அநாமிகன், த. ஜெயசீலன், எஸ்.பி.பாலமுருகன், கோளாவில் கி.சுரேந்திரன், தருமவதனன், த.அகிலன், த.மலர்ச்செல்வன், மாணிக்கன் இளங்கோ ஆகியோரின் கவிதைகளும், செம்பியன் செல்வன், முத்து இராதாகிருஷ்ணன், விழிசிட்டி க.சிவராசா, உடுவில் அரவிந்தன் ஆகியோரின் கவிதைகளும் இடம்பெறுகின்றன.

கட்டுரைகளை கலாநிதி ப.புஸ்பரட்ணம், க.சட்டநாதன் ஆகியோர் எழுதியுள்ளனர். மேலும் தூயவனின் கள வெளிப்பாடும், கனடாவிலுள்ள 'வானம்பாடிகள்' இசைக்குழுவைச் சேர்ந்த நர்த்தனுடனான நேர்காணலும் மானுடத்தின் தமிழ்க்கூடலின் பதிவுகளும் சோ.பலின் மொழிபெயர்ப்பும் இடம்பெற்றுள்ளன.

# சமாதானப் பேச்சுக்களை நடத்த சர்வதேச சபை அமைக்க வேண்டும்

## - சிறிலங்கா சனாதிபதி சந்திரிகா

சமாதானப்பேச்சுவார்த்தைகளை நடத்துவதற்கு சர்வதேச சபை ஒன்று அமைக்கவேண்டுமென சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க வலியுறுத்தியுள்ளார்.

நேற்று செய்தியாளர் மத்தியில் உரையாற்றிய சனாதிபதியின் பேச்சாளர் இவ்வாறு கூறியிருக்கிறார்.

அவர் மேலும் கூறுகையில்:

வடக்கு -கிழக்கிற்குக் கொடுக்கப்படும் தீர்வு என்ன என்பதை பிரதமர் சனாதிபதிக்கு அறிவிக்கவில்லை. இது இன்னமும் தயாரிக்கவில்லையென பிரதமர் கூறியிருக்கிறார்.

தமிழ் மக்களுக்குக் கொடுக்கப்படும் தீர்வு குறித்தும் அடிப்படை பிரச்சினை குறித்தும் இன்னமும் பேசப்படவில்லை. வெவ்வேறு பிரச்சினைகள் பற்றியே இப்போது பேசிக்கொண்டு போகின்றனர்.

அடிப்படைப்பிரச்சினைகள் பற்றிக் கதைத்தபின்பே தீர்வுக்கு வரவேண்டும். இதை அரசியல் யாப்புக்கு உட்படுத்தல் வேண்டும் இதற்கு சில காலம் எடுக்கும் என்றார்.

### பாதுகாப்பு...

சிறிலங்காப் படை உயர் அதிகாரிகளையும் சந்தித்து கலந்துரையாடியுள்ளார். படைத்தரப்பினரால் பலப்படுத்தப்பட்டுவருகின்றகாப்பரண்கள், மற்றும் படை முகாம்களின் முன்னரங்கப்பகுதி பாதுகாப்பு நிலையங்கள் தொடர்பாகவும் இச் சந்திப்பில் கலந்துரையாடியுள்ளார்.

அத்துடன் வவுனியா வடக்குப் பகுதியில் மக்கள் மீளக் குடியேறியுள்ள குக்குவெளி, ஓமந்தைப்பகுதிகளுக்கும் இவர்கள் சென்று பார்வையிட்டுள்ளதாக தெரியவருகிறது.

### படையினரின்...

இறங்குதுறையில் தொழிலாளர்கள் காலை 06.30 மணி முதல் மாலை 05.30 மணி வரையான காலப்பகுதியில் பொருட்களை இறக்கும் பணியில் இதுவரை ஈடுபட்டனர்.

ஆயினும் தற்போது பருத்தித்துறையில் நிலை கொண்டுள்ள 524 ஆவது படைப்பிரிவின் பொறுப்பை ஏற்றுள்ள படையதிகாரி நேற்று பிறப்பித்த உத்தரவில் காலை 10.30 தொடக்கம் 03.30 மணி வரை மட்டுமே தொழிலாளர் பணியில் ஈடுபட முடியும் எனத் தெரிவித்துள்ளார்.

நேற்று பொருட்களை இறக்கச் சென்ற தொழிலாளர்கள் துருவித் துருவிச் சோதனை இடப்பட்டதுடன் அங்குள்ள தனியார் காணி ஒன்றில் காலை 10.30 மணி வரை தடுத்து வைக்கப்பட்டனர்.

படையினரின் இந்தக் கெடுபிடி நடவடிக்கைகளைக் கண்டித்தே தொழிலாளர் நேற்று முதல் பகிஷ்கரிப்புப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

இதனால் கப்பலில் இருந்து இறக்கப்படும் பொருட்களை ஏற்றிச் செல்லவென வந்திருந்த நூற்றுக் கணக்கான பாரஊர்திகளும் அங்கு காத்து நின்றன.

துறைமுக அதிகாரிகளும் மேற்படி குறிப்பிட்ட நேரத்திலேயே கடமையில் ஈடுபட வேண்டும் எனவும் படையினர் உத்தவிட்டுள்ளனர். (27,33)

# சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் 14ஆவது தேசிய மாநாடு இன்று

## 10 தீர்மானங்கள் கொண்டுவரப்படும்

(கொழும்பு)

சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் 14ஆவது தேசிய மாநாடு இன்று இடம்பெறவுள்ளது.

இதில் சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் 950 செயற்குழு உறுப்பினர்கள் கலந்துகொள்ளவுள்ளனர்.

பொதுசன ஐக்கிய முன்னணி தலைமையில் அடுத்த அரசை அமைப்பது குறித்தும் ஜே.வி.பி. யுடனான கூட்டணி தொடர்பாகவும் இம்மாநாட்டில் விவாதிக்கப்படவுள்ளது.

தேசிய அரசியல் பிரச்சினைகள் தொடர்பாக பத்து புதிய தீர்மானங்களும், சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் யாப்பில் பல புதிய மாற்றங்களும் கொண்டுவரப்படவிருப்பதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

### கிளிநொச்சியில்...

பதிவு செய்யப்பட்டுள்ளதோடு கடந்தஏப்ரல்மாதம் சிறிலங்கா அரசாங்கத்தினால் ஒரு தொண்டு நிறுவனமாக ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது.

தமிழ் மக்களுக்குத் தொண்டு செய்வதோடு புனர்நிர்மாண வேலைகளுக்கு, உதவுதல், வடக்கு-கிழக்குப் பகுதிகளை மற்றைய நாடுகளில் உள்ளது போல் ஒரு தொழில் நுட்ப ரீதியில் முன்கொண்டு வருதல், அதியுயர் கல்விக்குத் தேவையான மூல வளங்களை வழங்குதல், அதியுயர் தொழில் நுட்பத்தோடு சேர்ந்த வேலை வாய்ப்புக்களை உருவாக்குதல், அதியுயர் தொழில் நுட்பத்தோடு சம்பந்தப்பட்ட வியாபார நடவடிக்கைகளை ஊக்குவித்தல், என்பவற்றிகு உதவி செய்வதோடு, நாட்டின் அபிவிருத்தியையும் மேம்படுத்தவுமுள்ளது.

இவ் "வன்னி ரெக்" எதிர் காலத்தில் ஒரு பல்கலைக் கழகத்திற்குச் சமமாக இருக்கவுள்ளதோடு, பல தொழில் நுட்பவியலாளர்களை உருவாக்கும் ஒரு வித்தாகவும் அமைகின்றது. இதன் முதற் கட்டமாக 60 மாணவர்கள் நேர்முகத் தேர்வு மூலம் தெரிவு செய்யப்பட்டுள்ளதோடு முதற்கட்டமாக, 09 மாதகால பயிற்சி நெறி ஆரம்பிக்கப்படவுள்ளது என அதன் இயக்குனர் தெரிவித்தார். (பா)

### இடைக்கால நிர்வா...

நாட்டின் பாதுகாப்பு வடகிழக்கில் அரசியல் தலைவர்கள் கொலைகள் உட்பட பல விடயங்கள் ஆராயப்பட்டுள்ளதுடன், ஆயுதங்களை ஒப்படைத்த அரசியல் தலைவர்களுக்கு போதிய பாதுகாப்பை வழங்குவது பற்றி ஆராயப்பட்டதாகவும் சனாதிபதி செயலகம் மேலும் அறிவித்துள்ளது.

நாட்டில் சட்டமும் ஒழுங்கும் சீர்குலைந்து வருவது சம்பந்தமாக இரு தலைவர்களும் நீண்ட நேரம் கலந்துரையாடியுள்ளனர். மக்களின் நன்மைகருதி இவ் விடயம் தொடர்பாக உடனடி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டுமென உடன்பாடு கண்டுள்ளனர்.

நிலைமையை மீளாய்வு செய்வதற்கும் சரியான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்குமென சட்டத்துறை அதிகாரிகளையும், பாதுகாப்பமைச்சின் பிரதிநிதிகளையும் குறைந்தது மாதத்தில் ஒரு தடவையாவது தங்களில் ஒருவர் சந்தித்து பேச்சுவார்த்தை நடத்த வேண்டுமெனவும் உடன்பட்டுள்ளனர்.

முக்கியமாக இளைஞர்கள் மத்தியிலும் பொதுவாக போதைப்பொருள் பாவிப்போர் மத்தியிலும் இருந்துவரும் போதைப்பொருள் துர்பிரயோகம் சம்பந்தமாகவும் விசேட கவனம் செலுத்தியுள்ளனர். இப்பிரச்சினைக்குத் தீர்வுகாணும் வகையில் பாராளுமன்றத்தில் சட்டமூலம் ஒன்றை சமர்ப்பிப்பதன் அடிப்படையில் அதிகாரசபையை உருவாக்கலாம் எனக் கருத்து வெளியிட்டதாகத்தெரியவருகிறது. இதன் கீழ் அமைக்கவுள்ள குழுவிற்கு சனாதிபதியும், பிரதமரும் தலைமை தாங்கவுள்ளனர்.

# தேசிய எழுச்சிப் பேரவை மாதாந்த சங்கம நிகழ்வு

தேசிய எழுச்சிப் பேரவையின் புதுக்குடியிருப்பு கோட்ட மாதாந்த பேராளர் சங்கமம் நேற்றுக் காலை 10.30 மணிக்கு புதுக்குடியிருப்புக் கோட்ட தேசிய எழுச்சிப் பேரவைச் செயலர் சண்முகநாதன் தலைமையில் நடைபெற்றது.

விடுதலைப் புலிகளின் முக்கிய உறுப்பினர் வே. பாலகுமாரன், தூயவன், அரசறிவியல் கல்லூரி விரிவுரையாளர் அரசண்ணா ஆகியோர் சமகால அரசியல் கருத்துக்களை வழங்கினர்.

அடுத்து ஊரக தேசிய எழுச்சிப் பேரவையினரால் அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டது. புதுக்குடியிருப்புப் பிரதேச செயலர் தனது பகுதி வேலைத் திட்டம் தொடர்பாக உரையாற்ற, தமிழீழ தேசிய எழுச்சிப் பேரவைப் பொறுப்பாளர் சஞ்சை உறுப்பினர்களின் கேள்விகளுக்கு உரையுடன் கூடிய பதிலை வழங்கினார்.

இறுதியாக முல்லை மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் முகுந்தன் கருத்துரையாற்றினார். (19, 26)

# குற்றச்செயல்களைக் கட்டுப்படுத்த முடியாத நிலையில் யாழ். இல் பொலிசார்!

(யாழ்ப்பாணம்)

யாழ். குடாநாட்டில் இடம்பெறும் குற்றச்செயல்களைத் தடுக்க முடியாது சிறிலங்காப் பொலிசார் பெரும் திண்டாடி வருகின்றனர்.

யாழ்.குடாநாட்டில் அதிகரித்து வரும் கொலை, களவு, கோஷ்டி மோதல், பாலியல் வல்லுறவு சம்பவங்களைக் கட்டுப்படுத்த முடியாது இவர்கள் திண்டாடி வருகின்றனர்.

தமிழ்மொழி தெரியாத பொலிசார் யாழ்.குடாநாட்டில் பொலிஸ் நிலையங்களில் கடமையில் இருப்பதே இந்த நிலைக்குக் காரணம் என பொலிஸ் வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (33)

### குடத்தனை...

முட்கம்பிகளும் வாகனங்களில் ஏற்றிச் செல்லப்பட்டு அப்பகுதியில் குவிக்கப்பட்டு இப்பணி இடம்பெற்று வருகின்றது.

படையினரின் இச்செயலானது ஒரு போர் நிறுத்த மீறலும், மனித உரிமை மீறலும் எனத் தெரிவித்து இதனை உடனடியாக நிறுத்த நடவடிக்கையினை மேற்கொள்ளுமாறு கடற்தொழிலாளர் சங்கத்தினர் யாழ். அரசியல்துறை செயலகத்தில் முறைப்பாடு செய்துள்ளனர். (27,33)


## பணிநிலை வெற்றிடம்

நிதித்துறை ஆளுகையில் கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னார் ஆகிய மாவட்டங்களிலுள்ள பெருந்தோட்டப் பகுதியில் கீழ் காணும் பணிநிலைக்குத் தகுதியானவர்களிடமிருந்து வேண்டுகைகள் கோரப்படுகின்றன.

01. கணக்குப் பதிவாளர்.
02. களஞ்சியக் காப்பாளர்.
03. உள்ளகக் கணக்காய்வாளர்.
04. எழுதுனர்.

தகைமைகள்:-

கணக்குப்பதிவாளர், களஞ்சியக்காப்பாளர், உள்ளகக் கணக்காய்வாளர்

க.பொ.த(உ/த)இல் சித்தி அல்லது க.பொ.த(சா/த)இல் சித்தியும், மூன்றாண்டுகளுக்குக் குறையாத தொழில்சார் பட்டறிவும்.

எழுதுனர்

க.பொ.த(உ/த) இல் சித்தி அல்லது க.பொ.த (சா/த) இல் சித்தியும், இரண்டாண்டுகளுக்குக் குறையாத தொழில்சார் பட்டறிவும்.

வேண்டுகை முடிவு நாள் :- 30.06.2003

வேண்டுகை அனுப்பவேண்டிய முகவரி:- பெருந்தோட்டப் பகுதி, இலக்கம் ?, இரண்டாம் பண்ணை, கனகபுரம், கிளிநொச்சி.

(3344)


இப்பத்திரிகை கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் 2003ம் ஆண்டு ஜூன் மாதம் 22ம் திகதி அச்சிட்டு, வெளியிடப்பட்டது.